# உதயன்

சுடர் : 36 கதிர் : 196 | வியாழக்கிழமை | வைகாசி 27 ஆம் நாள் 10 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## 13 நாள்களில் 500 சாவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொரோனாத் தொற்றால் முதல் 500 பேர் உயிரிழப்பதற்கு 343 நாள்கள் சென்றன. அடுத்த 500 பேர் உயிரிழப்பதற்கு 72 நாள்கள் சென்றன. மூன்றாவது 15 ➤

## தொற்று 2,735

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 735 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் 12 ➤

## தொற்றாளர்களை ஏற்றிவந்த பஸ் மோதியதில் விவசாயி சாவு

**வான்நோக்கி துப்பாக்கிச் சூடு**

**மட்டுவிலில் நேற்றுமாலை சம்பவம்**

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொவிட்-19 நோய்த் தொற்றாளர்களை ஏற்றி வந்த சொகுசு பஸ் ஒன்று, சைக்கிளில் பயணித்த ஒருவரை மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே 15 ➤



## திருட்டுப் பேர்வழி நல்லூரடியில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.சுன்னாகத்தில் வீடு புகுந்து பணம் மற்றும் பொருள்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். திருடப்பட்ட பொருள்களும் அவரிடமிருந்துமீட்கப்பட்டன என்று சுன்னாகம் பொலி 15 ➤

## வடக்கில் நேற்று 156 தொற்று

**யாழில் மாத்திரம் 121**

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கு மாகாணத்தில் 967 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 156 பேருக்குத் தொற்று உறுதிப்படுத் 15 ➤

# இலங்கையில் கொரோனா இந்தியாவை விட மோசம்!

**புள்ளி விவரங்களுடன் அம்பலப்படுத்துகிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்**

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொரோனாத் தொற்றில் இந்தியாவை விட மோசமான கட்டத்தை இலங்கை அடைந்துள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் புள்ளி விவரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளது. தற்போதைய நிலை தொடருமானால் இலங்கை இன்னும் மிகப் பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் என்றே அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது. 15 ➤

## பல்கலைக்கழகமாக தரமுயர்ந்தது வவுனியா வளாகம்

கொழும்பு, ஜூன் 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாகம், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பல்கலைக்கழகமாகத் தர 15 ➤

## சிகிச்சைபெற்ற 5 ஆயிரம் தொற்றாளர்கள் எங்கே?

**அரசிடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேள்வி**

யாழ்ப்பாணம், ஜூன் 10

தொற்று நோய்ப் பிரிவின் தகவல்களுக்கு அமைவாக கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 5 ஆயிரத்து 16 பேர் ஒரே நாளில் பதிவுகளிலிருந்து காணாமல் போயுள்ளனர். அவர்கள் எங்கே என்று அரச மருத்துவ 15 ➤

## ஓய்வூதியர்களுக்காக யாழில் இன்று பஸ்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் ஓய்வூதிய கொடுப்பனவுகளை பெறுபவர்களுக்கு வசதியாக இன்று வியாழக்கிழமை இலங்கை போக்குவரத்துச் சபையின் 58 பஸ்கள் யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடவுள்ளன என்று 15 ➤

## மண்டபத்தில் திருமணம் தனிமைப்படுத்த உத்தரவு

*மல்லாகம் நீதிமன்றம் வழங்கியது*

யாழ்ப்பாணம், ஜூன் 10

பயணத் தடைக் காலத்தில் திருமண மண்டபத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வு தொடர்பில் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருமண நிகழ்வில் பங்கேற்றவர்களை தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் 14 நாள்கள் 15 ➤

## வாயில் வாளைக் கௌவி 'ரிக்ரொக்' விட்டவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

வாயில் வாள் ஒன்றை வைத்து ரிக் ரொக் (TikTok) காணொலி செய்து சமூக ஊடகங்களில் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை கோப்பாய் பொலி 12 ➤




செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி
021 493 0000
077 1209994

விளம்பரம்
021 493 1111
071 6182182


## ஆசிரியர் வாண்மை விருத்திக்கு பெருமளவு பணம் செலவு

வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 10

அரச சார்பற்ற நிறுவனங்களால், வடக்கு மாகாண ஆசிரியர் வாண்மை விருத்திப் பயிற்சிகளுக்காக பெருமளவு பணம் செலவிடப்படுகின்றது. எனினும், அந்தளவுக்கு பெருந்தொகைப் பணம் செலவிட வேண்டிய அவசியம் இல்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் பீ. எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். அத்தகைய நிதியை விசேட தேவையுடைய குழந்தைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் 12 ➤




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நாட்டை மீட்க ரணில் வருவார்

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
இலங்கையை மிகப்பெரிய அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்காக, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீண்டும் நாடாளுமன்றுக்கு வருகைதருவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவிக்கையில்,

இலங்கை தற்போது பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுமார் ஒருவருடத்துக்கும் அதிகமான காலம் எமது நாடும், ஏனைய உலக நாடுகளும் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளன.

அதேபோன்று வெள்ளப்பெருக்கு காரணமாக பலரும் உயிரிழந்துள்ளனர். கொழும்புத் துறைமுகத்துக்கு அருகாமையில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலைத் தொடர்ந்து மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன.

நாட்டை முழுமையாக முடக்குமாறு சுகாதாரத்தரப்பினரால் கோரப்பட்டபோதிலும், அரசு பயணக்கட்டுப்பாடுகளையே விதித்தது.

இதனூடாக உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று நாம் கருதவில்லை. மாறாக தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கையும், இறப்புக்களின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. நாடு பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. இந்த நிலையில் ரணில் நாடாளுமன்றுக்குச் செல்லவேண்டும் என்பதே கடந்த 5 மாதங்களாக எமது கட்சியின் அனைத்துத் தரப்பினரதும் கோரிக்கையாகக் காணப்பட்டது.

அதற்கமைவாக அவரை நாடாளுமன்றம் அனுப்புவதற்கான தீர்மானம் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. எமது நாட்டின் சிறந்த எதிர்காலத்துக்கு அனுபவமும் செயற்திறனும் உள்ள, சர்வதேச சமுகத்துடன் ஒன்றிணைக்கக் கூடிய, சிறந்த தெளிவைக்கொண்ட, ஆசியப்பிராந்தியத்தில் இந்தியாவுடன் ஒன்றிணைந்து செயற்படக் கூடிய அரசியல் தலைவரொருவரின் தேவை தற்போது அவசியமாகவுள்ளது. அந்த அனைத்துத் தகுதிகளும் ரணில் விக்கிரமசிங்கவிடம் காணப்படுகின்றது- என்றார். (ம-4)



# மூன்று நாள்களில் 20 லட்சம் சைனோ.'.போர்ம் தடுப்பூசிகள்

## இலங்கையை வந்தடைந்தன

கொழும்பு, ஜூன் 10
இலங்கை அரசு சீனாவிடம் கொள்வனவு செய்த 10 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நேற்றுக் காலை 5 மணிக்கு நாட்டை வந்தடைந்தன. இதன் ஊடாக இதுவரை இலங்கைக்கு 31 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சீனாவிடமிருந்து இலங்கைக்கு நன்கொடையாக முதலில் 6 லட்சம் தடுப்பூசிகளும் பின்னர் 5 லட்சம் தடுப்பூசிகளும் கிடைத்தன. இதற்கு மேலதிகமாக இலங்கை 20 லட்சம் தடுப்பூசிகளை கொள்வனவு செய்திருந்தது.

அதில் முதல் தொகுதி கடந்த 6ஆம் திகதி இலங்கையை வந்தடைந்திருந்தது. இரண்டாவது தொகுதி நேற்று நாட்டை வந்தடைந்தது. (ஒ.4,5)

# அமெரிக்க தீர்மானத்தால் நல்லிணக்கம் பாதிக்கும்

## வெளிவிவகார அமைச்சு தொடர் அழுத்தம்

கொழும்பு, ஜூன் 10
இலங்கை தொடர்பில் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தால், நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த தீர்மானத்தைக் கைவிட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சு, அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.




இது தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கு, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தைத் தொடர்புகொள்வதற்கான முயற்சிகளை வெளிவிவகார அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்க தூதரகப் பொறுப்பதிகாரி மார்ட்டின் கெலி இலங்கை வெளிவிவகார அமைச்சரை சந்தித்தவேளை, வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தலையீட்டை கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான நாடுகளில் இலங்கையைத் தெரிவுசெய்துள்ளமைக்கும் வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார். (ம-4)



# எம்.பியாகிறார் ஞானசார தேரர்?

கொழும்பு, ஜூன் 10
பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார் என்று அபே ஜாதிக பலய கட்சியின் தலைவர் சமன் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் அபே ஜாதிக பலய கட்சி தேர்தலில் போட்டியிட்டு, ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றது.

இந்த தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டிருந்த நிலையில், இறுதியாக அத்துரலிய ரத்னதேரர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்று மாதங்களுக்கு மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க விரும்புகின்றேன் என்று ரத்ன தேரர் வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் ஞானசார தேரருக்கு இந்தப் பதவி வழங்கப்படவுள்ளது.

அத்துரலிய ரத்ன தேரர் பதவியை ராஜினாமா செய்தவுடன், ஞானசார தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அத்துரலிய ரத்னதேரர் எவ்வித கருத்தையும் இதுவரையில் வெளியிடவில்லை. ஆறு மாதங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்ன தேரர் வகித்தாலும், பிரச்சினை இல்லை என்று ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (ம-4)

SJB



# ரணில் வருகையால் சஜித் அணி பரபரப்பு

கொழும்பு, ஜூன் 10
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் வருகை தரவுள்ளார் என்ற அறிவிப்பு வெளியாகியதும், சஜித் அணிக்குள் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எதிர்வரும் 21ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

கடந்த திங்கட்கிழமை கட்சியின் முதலாவது குழு சந்திப்பை நடத்தியது. அதில் எதிர்கட்சி தலைவராக சஜித் பிரேமதாசவையே தொடர்ந்தும் சார்ந்திருப்போம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடாளுமன்றுக்குச் செல்லவுள்ளார்.

இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் மீண்டும் கூடி எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை கொரோனாத் தொற்றுக்குள்ளான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 21ஆம் திகதிக்கு முன்னராக மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில் இணைக்க ஆலோசனை



**கொழும்பு, ஜூன் 10**

**ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஆலோசனை வழங்கினார்.**

தாதியர் சேவையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர், மேல் மாகாண பிரதான சங்கநாயக்க முறுத்தெட்டுவே ஆனந்த தேரரின் வேண்டுகோளுக்கமைய அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் சுமார் 34 ஆயிரம் தாதியர்கள் இதுவரை சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்கள் இதுவரை முகங்கொடுத்துள்ள குறுகிய மற்றும் நீண்டகால தீர்வு காணல் மற்றும் முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடுவதே இச்சந்திப்பின் நோக்கமாகும்.

### வசதிகள் மேம்படுத்தல்

தாதியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் கருத்து தெரிவித்தார்.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவுக்கு பயிற்சி பெறாத தாதியர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை குறித்து தேரர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா, தற்போது ஓராண்டுக்கு பயிற்சிக்காக 2ஆயிரம் தாதியர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்படுவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டினார். தற்போது அப்பிரிவுகளில் சேவையாற்றும் பயிற்சி பெறாத தாதியர்களை குறித்த பிரிவுகளில் சேவையாற்றும் காலத்தை பயிற்சி காலத்துடன் சேர்க்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார். மேலும் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச். முனசிங்க, இதுவரை 840 தாதியர்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சேவையாற்றுவதற்கான குறுகிய கால பயிற்சி வழங்கப்பட்டுள்ளது எனவும் மேலும் சுமார் ஆயிரம் பேருக்கு துரித பயிற்சி வேலைத்திட்டமொன்று செயற்படுத்துகிறோம் எனவும் தெரிவித்தார்.

### சேவை நீடிப்பு

ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சருக்கு இதன்போது தெரிவித்த பிரதமர், தாதியர்களின் சேவை காலத்தை நீடிப்பது குறித்த செயற்பாட்டின் தற்போதைய நிலை குறித்தும் வினவினார்.

தாதியர்களின் சேவை காலத்தை 63 ஆண்டுகள் வரை நீடிப்பது தொடர்பான அமைச்சரவை பத்திரம் ஏற்கனவே அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச். முனசிங்க குறிப்பிட்டார்.

### தடுப்பூசி

சுகாதாரத் துறையில் அனைவருக்கும் இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் செயலர் குறிப்பிட்டார். பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் தாதியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொடுக்க முறையான செயற்பாடொன்றை வகுக்குமாறு இதன்போது பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

### பட்டம்

தாதியர் பட்டத்தை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர், சுகாதார அமைச்சருக்கு தெரிவித்தார். தற்போது தாதியர் பட்டத்தை வழங்குவதற்கான பணி சட்ட வரைவுகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட வரைவை விரைவாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது என்பது இந்த கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. பிரதமர், ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப்பகுதியில் தாதியர்களுக்கான சீருடை கொடுப்பனவு அதிகரிக்கப்பட்ட பின்னர் இதுவரை அக் கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை என்று தெரிவித்த முறுத்தெட்டுவே தேரர், அக்கொடுப்பனவை அதிகரிக்குமாறு வேண்டு கோள் விடுத்தார். இது குறித்து பொதுத் தீர்மானம் மேற்கொண்டு எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் அதனை நிறைவேற்ற முடியும் என பிரதமர் தெரிவித்தார். (ஒ.இ)

## 65 ஆயிரம் தடுப்பூசிகள் நாளை வந்தடையும்

கொழும்பு, ஜூன் 10

ரஷ்யாவின் 'ஸ்புட்னிக் - வி' கொரோனாத் தடுப்பு தடுப்பூசிகளின் 50 ஆயிரம் முதல் டோஸ் மற்றும் 15 ஆயிரம் இரண்டாவது டோஸ் என்பன நாளை நாட்டை வந்தடையவுள்ளன என அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தினுஷ தஸ்நாயக்க தெரிவித்தார். (ஒ.5,இ)



## அரசியல்வாதியின் மனைவிக்கு முன்னுரிமை

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதியின் மனைவி, தடுப்பூசிக்காக வரிசையில் காத்திருந்த மக்களைக் கடந்து தடுப்பூசி மையத்துக்குள் நுழைந்து தடுப்பூசி ஏற்றிச் சென்றுள்ளார். இது அங்கு நின்ற பொதுமக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல்வாதியின் மனைவியுடன் ஒரு அமைச்சரவைப் பாதுகாப்பு பிரிவு அதிகாரி வந்துள்ளார். அவர் தனி நுழைவாயில் வழியாக தடுப்பூசி மையத்துக்குள் அரசியல்வாதியின் மனைவியை அழைத்துச்சென்றுள்ளார். அங்கு கடமையில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தரும் வாயிலைத் திறந்து தடுப்பூசி மையத்துக்குள் அனுமதித்துள்ளார். (ஒ.5,இ)

## சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்றுக் கவனவீர்ப்பு

கொழும்பு, ஜூன் 10

5 கோரிக்கைகளை முன்வைத்து பல சுகாதார தொழிற்சங்கங்கள் 4 மணி நேரப் பணிப்புறக்கணிப்பை நேற்று மேற்கொண்டன. கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனை உட்பட 42 மருத்துவமனைகளில் இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. 2 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சுகாதார ஊழியர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு வழங்குவது, கொரோனாக் கடமைகளில் ஈடுபடும் சுகாதார ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது, மற்றும் கொரோனாத் தடுப்பூசிகள், உபகரணங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பது போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, பி.சி.ஆர். மாதிரிகளை சேகரிப்பதில் மருத்துவர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ.5,இ)







## இவர்களுக்கு கட்டுப்பாடில்லையா?

ராவண பலய அமைப்பின் அமைப்பாளர் சப்தாதிஸ் தேரரிர் தாயார் கடந்த 7ஆம் திகதி உயிரிழந்திருந்தார். அவரது உடல் ஜெயரத்ன மலர்சாலையின் பிரமுகர்கள் பிரிவில் வைக்கப்பட்டிருந்தது. பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சுகாதார அமைச்சர் பவித்திரா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இதன் பின்னர் கொழும்பிலிருந்து இரத்தினபுரிக்கு வாகனப் பேரணியாக இறுதி ஊர்வலம் சென்றது. மக்கள் வீதியின் இரு மருங்கிலும் இருந்து பூ தூவினர். இறுதிக் கிரியைகளில் பெருமளவு பிக்குகளும் கலந்துகொண்டனர். இவ்வளவும் நடைபெற்றது நாட்டில் முழுமையான பயணத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே. (ஒ.5,44,இ)

## இரகசிய தடுப்பூசியேற்றல்: அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 10

காலி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிராந்திய தொற்றுநோயியல் மருத்துவர் ஆகியோர் நேற்றுத் திடீரென இடமாற்றப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் மூன்று நாள்களுக்கு முன்னர் அஸ்ராஜெனகா தடுப்பூசி ஏற்றப்பட்டது. மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் இரகசியமாக அங்கு அழைக்கப்பட்டு தடுப்பூசி ஏற்றல் செயற்பாடு நடைபெற்றது. இது தொடர்பில் கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

அதனையடுத்து அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. இந்த நிலையில் மேற்படி இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ.5,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை இனி கடவுள்தான் காப்பற்றவேண்டும்

## கூறுகிறார் ஆனந்த தேரர்



கொழும்பு, ஜூன் 10
நாட்டையும், நாட்டு மக்களையும் கடவுள்தான் பாதுகாக்க வேண்டும். அரசை நம்பிப் பயனில்லை என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அபயராம விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசு கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முறையான கொள்கைத் திட்டங்களை வகுக்கவில்லை. சுகாதார அமைச்சின் பொறுப்பற்ற செயற்பாட்டை பலமுறை சுட்டிக்காட்டியும் எவ்வித மாற்றமும் இதுவரையில் ஏற்படவில்லை. அரசியல் முரண்பாடுகளைத் துறந்து, அனைத்துத் தரப்பினரது யோசனைகளையும் ஒன்றிணைத்து சிறந்த திட்டத்தை வகுக்குமாறு கேட்டோம். எமது கருத்துக்கு மதிப்பளிக்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் மாத்திரம் நாம் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டன.

தற்போது அரசுமீது நாட்டு மக்கள் கொண்டுள்ள வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதே தவிர. குறைவடையவில்லை. அரசின்மீது வெறுப்புக் கொண்டிராத பொதுமக்களைக் காண்பது என்பது தற்போது அரிதாகவே உள்ளது. அரசின் முறையற்ற செயற்பாடுகளை விமர்சித்து பொதுமக்கள் முகப்புத்தகத்திலும் விமர்சனங்களைப் பதிவேற்றம் செய்கின்றனர். பொதுமக்களின் இவ்வாறான செயற்பாடுகள் அவர்கள் அடைந்துள்ள ஏமாற்றத்தை வெளிப்படுத்துகின்றன - என்றார். (ம-4)

# கொரோனா வைரஸ் 2023 வரை நீடிக்கும்

## திட்டங்கள் அவசியம் என்கிறார் ரணில்



கொழும்பு, ஜூன் 10
கொரோனா வைரஸ் 2023ஆம் ஆண்டு வரை நீடிக்கும். எனவே பொதுமக்கள் உயிரிழப்பதைத் தவிர்ப்பதற்காக அடுத்த சில வருடங்களுக்கு மாற்றுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசு நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் இதுவரை தங்களைப் பாதுகாப்பதிலேயே ஆர்வமாக உள்ளது.

மாற்றமடைந்த வைரஸ்கள் உருவாகக்கூடும் என்பதால் அவற்றை எதிர்கொள்வதற்கான அடிப்படைத் தேவைகளை உருவாக்கவேண்டும். குறிப்பாக நோயாளிகளுக்கு சிச்சை வழங்குவதற்காக 300 சிகிச்சை நிலையங்களை அமைக்க வேண்டும். வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசியல் மயப்படுத்தாமல், திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும் - என்றார். (ம-4)

# அரசை பாதுகாப்பதற்காகவே நாடாளுமன்றம் வருகிறார் ரணில்

## இதனால் தமக்கு பாதிப்பு இல்லை என்கிறது சஜித் அணி

**கொழும்பு,ஜூன் 10**
**"மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவரான ரணில் விக்கிரமசிங்க, அரசை பாதுகாப்பதற்காகவே நாடாளுமன்றம் வருகிறார். எனவே, அவரின் நாடாளுமன்ற வருகையானது எமக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தலாக அமையாது." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.**

சஜித் பிரேமதாசவுக்கு நம்பிக்கை தெரிவித்து ஏன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது தொடர்பிலும், ரணிலின் நாடாளுமன்ற வருகை சம்பந்தமாகவும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது, ஒரு குழு தம்முடன் இணையவுள்ளது என்றெல்லாம் அரசும், அரசுக்கு சார்பானவர்களும் சமூகவலைத்தளங்கள் ஊடாக பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறு பரப்பப்படும் தகவல்கள் போலியானவை என்பதை நிரூபிப்பதற்காகவும், கட்சி உறுப்பினர்கள் சஜித் பக்கமே இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவுமே நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க என்பவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர். அரசின் தேவைக்கேற்ப செயற்படக்கூடிய ஒருவர். ஏதேனும் ஒரு விதத்தில் பயன்பெறுவதற்காகவே ரணில் விக்கிரம சிங்கவை அரசு, பாதுகாப்பு வழங்கி வைத்துள்ளது. எனவே, ரணிலின் கருத்தை நம்புவதற்கு மக்கள் இனியும் தயாரில்லை. மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் நாடாளுமன்றம் வருவது எமக்கு எவ்விதத்திலும் பிரச்சினையாக அமையாது." - என்றார். (ஐ-44)

# இந்தியாவைப் பகைத்தமையின் விளைவே தடுப்பூசி விவகாரம்!

## ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 10
தற்போதைய அரசு இந்தியாவைப் பகைத்துக் கொண்டமையின் விளைவாகவே, கொரோனாத் தடுப்பூசிகள் அந்த நாட்டிலிருந்து கிடைக்கப்பெறவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவிக்கையில்,

இந்தியாவிடமிருந்து தடுப்பூசி கிடைக்காமைக்கு அரசு தெரிவித்த காரணங்கள் பொய்யானவை. குறித்த தடுப்பூசியைத் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஜனவரி மாதம் 21ஆம் திகதி ஏற்பட்ட தீயே இந்தியாவிலிருந்து தடுப்பூசி கிடைக்காமைக்கான காரணம் என அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர். ஆனால் இது உண்மையில்லை. ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்கு பின்னர் இந்தியா ஏழு நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்கியுள்ளது.

கொழும்புத்துறைமுக நகர திட்டம் காரணமாக உறவுகள் பாதிக்கப்பட்டதால், இந்தியாவிடமிருந்து எங்களுக்கு தடுப்பூசி கிடைக்கவில்லை- என்றார். (ம-4)

# அரசை குறைகூறுவதே எதிர்த்தரப்பின் வேலை

## சாடுகின்றார் பவித்ரா

கொழும்பு, ஜூன் 10
எதிர்க்கட்சியினர் அரசின் முயற்சிகளில் தவறுகளைக் கண்டுபிடிப்பதிலும், குற்றம் சாட்டுவதிலும் தமது நேரத்தை வீணடிக்கின்றனர் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் அரசியலில் வெற்றிகளோ, தோல்விகளோ ஏற்படாது என்பதைப் புரிந்துகொள்ளவும்.

ஆபத்தான நிலையிலுள்ள ஒரு நாடு இரண்டு வாரங்களில் மீள முடியும். அதேநேரம் வைரஸ் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு நாடு மீண்டும் ஒரு நெருக்கடியை எதிர்கொள்ளக்கூடும். உலகளாவிய தொற்றின்போது, உணர்வுள்ள எதிர்க்கட்சி அரசியல் இலாபம் தேடாது. தேர்தல்களின்போது எதிர்க்கட்சியின் செல்வாக்கற்ற தன்மைக்கு முக்கிய காரணம் அவர்களின் குறுகிய மனப்பான்மையும், கருத்துகளும்தான். எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் திட்டங்கள் நாட்டில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார். (ம-4)

# பேர்ள் கப்பல் விவகாரத்தை பகிரங்கப்படுத்தல் வேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 10
இலங்கைக் கடலில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவிக்கையில்,

குறித்த கப்பலின் இலங்கை முகவர் நைட்ரிக் அசிட் கழிவு தொடர்பில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களை அழித்தமை தொடர்பில், குற்றவியல் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். இந்த விசாரணை மிக முக்கியமானது. பேரழிவு குறித்த தகவல்களை மறைப்பது குற்றமாகும். எனவே அரசு முறையான விசாரணைகளை மேற்கொண்டு, அனைத்துத் தகவல்களையும் பகிரங்கப்படுத்த வேண்டும்- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வட்டமும் பாதாளமும்!

**வா**ழ்க்கை ஒரு வட்டம். அந்த வட்டத்தில் இப்போது இலங்கைக்கு இறங்குமுகம். பங்களாதேஷுக்கு ஏறுமுகம். ஒருகாலத்தில் இலங்கை அணிக்கு பங்களாதேஷ் அணியுடன் கிரிக்கெட் போட்டி வந்துவிட்டால் தனி உற்சாகம் வந்துவிடும். உலகத்தில் என்ன சாதனைகளெல்லாம் இருக்கின்றனவோ அவை அத்தனையும் செய்து முடிக்க, வலிய வந்து மாட்டும் பலியாடாகவே பங்களாதேஷ் அப்போதைக்கு இருந்தது. ஆனால் இப்போது இலங்கையை தங்கள் நாட்டுக்கு அழைத்து 'வைச்சு செய்யும்' வித்தைகளோடு, கிரிக்கெட்டில் பங்களாதேஷின் கை ஓங்கத் தொடங்கிவிட்டது. கிரிக்கெட்டில் தான் இந்த நிலைமை என்று விளையாட்டுத்தனமாகக் கூட ஆசுவாசப்படுத்த முடியாது. பொருளாதாரத்திலும் இலங்கையை 'ஓவர் ரேக்' செய்து கொண்டு பங்களாதேஷ் எங்கேயோ போய்விட்டது. அதன் ஒரு வெளிப்பாடாகவே 200 மில்லியன் டொலரை பங்களாதேஷ் இலங்கைக்கு கடனாக வழங்கியுள்ளது.

பங்களாதேஷ் என்பது இலங்கையைப் போல நாலாபுறமும் கடலும், வளங்களும் கொட்டிக் கிடக்கும் ஒரு நாடல்ல. இத்தனைக்கும் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர், 1971 ஆம் ஆண்டுதான் பாகிஸ்தானில் இருந்து பிரிந்து தனிநாடாக பங்களாதேஷ் உருவானது. வெறும் 50 வருட வரலாற்றைக் கொண்ட, வளங்கள் ஏதும் பெரிதாகக் கொண்டிராத பங்களாதேஷ் வெள்ளப்பெருக்கு, புயல் என வருடந்தோறும் இயற்கையின் சீற்றத்துக்கு தவறாமல் பலியாகி வந்தது. கூடவே 1991 வரை நாட்டில் இராணுவ ஆட்சியும் அதற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக ஆட்சியில் மலிந்த ஊழல்களாலும் பங்களாதேஷ் நலிவடையவே செய்தது.

ஆனாலும் இன்னொரு புறத்தில் தன்னிடமிருந்த ஒரேயொரு வளமான மனிதவளத்தை முதலீடாக நம்பி, அதன் வழியே அபிவிருத்தி நோக்கிப் பயணிக்கவும் செய்தது. அதிக சனத்தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில் உலகில் எட்டாவது இடத்தில் இருக்கும் பங்களாதேஷ், ஆடைக் கைத்தொழிலில் தனிக்காட்டு ராஜாவாக மாறத் தொடங்கியது. மெல்ல மெல்ல ஊழல்வாதிகளும் அகற்றப்பட்டு, ஒப்பீட்டளவில் உயர்வான ஜனநாயகத் தன்மையோடு பங்களாதேஷின் ஆட்சிப்பீடமும் வலுப்பெற்றது. குழப்பங்கள் இல்லாமல் அமைதிப்பூங்காவா மாறிய நாட்டின் முன்னேற்றத்துக்காக நாட்டு மக்கள் அனைவரும் விடாது உழைத்தனர். அதன் பயனாக உலகில் வேகமான பொருளாதார வளர்ச்சி கொண்ட நாடுகள் பட்டியலில் ஒரேமூச்சில் ஏழாவது இடத்தை எட்டிப்பிடித்தது. ஆனால் ஒருகாலத்தில் அடுத்த சிங்கப்பூர் என வர்ணிக்கப்பட்ட இலங்கையோ, 1940 களில் இருந்ததை விடவும், பொருளாதாரத்தில் அதலபாதாளத்தில் வீழ்ந்து போய்க்கிடக்கிறது. முன்னர் இலங்கையால், பிச்சைக்கார நாடுகள் என அடையாளப்படுத்தும் நாடெல்லாம், இலங்கைக்கு பிச்சை போடுமளவுக்கு வளர்ந்து கொண்டே செல்ல, நாம் மட்டும் மொடல் அழகிகளுக்கு மாற்றுடை எடுத்துக் கொண்டு ஓடிச்செல்லும் அமைச்சர்களை வாய்க்கப்பெற்றவர்களாக தேய்ந்து கொண்டிருக்கிறோம். நாடு நாடாகப் பிச்சை எடுத்தே, சேடமிழுக்கும் நாட்டின் இறுதிமூச்சை இழுத்துப் பிடித்து வைத்திருக்கிறோம்.

எந்தவொரு வளமும் இல்லாதிருந்திருந்தால்கூட, இலங்கை இப்படி பொருளாதாரத் தேய்மானம் கொண்ட நாடாக இருப்பதை ஏதோவொரு வகையில் நியாயப்படுத்த முடியும். ஆனால் உலகின் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடம், சுற்றிலும் அள்ளஅள்ளக் குறையாத கடலுயிரிகள், நாடெங்கும் வனம், மலைகள், நதிகள், இரத்தினக் கற்கள், தேயிலை, தெங்கு, கனியங்கள் என்று வளங்கள் கொட்டிக் கிடக்கும் ஒரு நாடு, பொருளாதாரத்தில் நொண்டிக்குதிரையாகவே இருப்பதை எப்படி ஏற்கமுடியும்? தொடர்ச்சியான போரை மட்டும் காரணம் காட்டி, இலங்கை தன் பொருளாதாரச் சறுக்கலுக்கு சாட்டுச் சொல்லமுடியாது. ஏனெனில் பங்களாதேஷும் மிக நீண்ட உள்நாட்டு போரையும், தொடர்ந்து இராணுவ ஆட்சியையும் கண்ட நாடுதான். அப்படி இருந்தும் அது பொருளாதார ரீதியாக அசுர வளர்ச்சி பெற்றமைக்கு, 1991 க்கு பின்னர் ஊழல் பெருமளவுக்கு இல்லாமலாக்கப்பட்டமையும், அரசியல்வாதிகள் அனைவரும் கட்சி நலனையும், சொந்த நலனையும் விட நாட்டு நலனை முன்னிறுத்திச் செயற்பட்டமையும், தொலைநோக்கான திட்டங்களுமே காரணம். அவையெல்லாம் இலங்கையில் எட்டாக்கனியாக இருக்கும் வரை, நாம் இப்படியே அதலபாதளத்திலேயே இருக்க வேண்டியதுதான்.




# போலிச்செய்தி பதிவிட்டால் பிடியாணை இன்றி கைது

## பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

**கொழும்பு, ஜூன் 10**



**சமூக ஊடகங்களில் போலிச் செய்திகள் வெளியிடுதல் மற்றும் பகிர்தல் ஆகியவற்றை மேற்கொள்பவர்களுக்கு எதிராக பிடியாணை இன்றிக் கைது செய்ய முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

சமூக ஊடக தளங்களில் தவறான செய்திகளை பரப்புவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க குற்றவியல் விசாரணைப் பிரிவு சிறப்புக் குழுவை நியமித்துள்ளது.

இந்தக் குழு போலிச் செய்திகளை பரப்பிய குற்றச்சாட்டில் கைதுசெய்பவர்களை, தண்டனைச் சட்டத்தின் 120, 286, 286 ஏ, 291 ஏ, 291 பி, 345, 365 டி, 402, 403, மற்றும் 486 ஆகிய பிரிவுகளின் கீழும், 2007ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் சர்வதேச உடன்படிக்கையின் பிரிவு 3 இன் கீழும் குற்றம் சுமத்தப்படலாம், கணினி குற்றச் சட்டத்தின் பிரிவு 06, 1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 02 மற்றும் 03 மற்றும் ஆபாச வெளியீடுகள் கட்டளைச் சட்டத்தின் விதிகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் - என்றார்

இதேவேளை சமூக ஊடகங்களில் பல அரசியல்வாதிகளை கேலி செய்தும், இனரீதியான பதட்டங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார் என கடந்த 7ஆம் திகதி ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு எதிராக தண்டனைச் சட்டத்தின் 120ஆவது பிரிவின் கீழும், 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க கணினி குற்றப் பிரிவின் கீழும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அவர் கண்டி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். 2 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக சசி மகேந்திரன்

## நாடாளுமன்ற பேரவை இணக்கம்

கொழும்பு, ஜூன் 10

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி அர்ஜுன ஒபேசகரவை உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட பரிந்துரைக்கு நாடாளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் சிசிர.ஜே.டி. ஆப்ரூ ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஜனாதிபதி இந்தப் பரிந்துரையை மேற்கொண்டிருந்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற பேரவைக் கூட்டத்தி லேயே இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவர் உயர்நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிக்கப்படுவதால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு நீதிபதி கே.பி. பெர்னாந்துவை நியமிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் நாடாளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், நீதிபதி கே.பி.பெர்னாந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதால் ஏற்படும் வெற்றிடத்துக்கு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி சசி மகேந்திரனை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் அரசமைப்புப் பேரவை தனது இணக்கத்தை வெளியிட்டுள்ளது.

அதேநேரம், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி. தெஹிதெனியவை நியமிப்பதற்கும் இங்கு இணங்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வர்த்தகத்துக்கு இரையாக்கப்பட்ட சிறுமி

## ஒருவர் கைது

**கொழும்பு, ஜூன் 10**

**15 வயதான சிறுமியை பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டில், 35 வயதான நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

மவுண்ட் லவெனியாவில் வீடொன்றை வாடகைக்கு எடுத்த நபர், அங்கு சிறுமியைத் தங்கவைத்துள்ளார். இணையம் மூலம் வாடிக்கையாளர்களை ஈர்த்து, தினசரி அந்த வீட்டில் சிறுமியை பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தியுள்ளார்.

குறித்த சிறுமி தெல்கொடவைச் சேர்ந்தவர். அவரது தாயாருடன் பேரம் பேசியே சிறுமியை சந்தேக நபர் அழைத்துச்சென்றுள்ளார் என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சிறுமியின் தாயாரிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். கடந்த 3 மாதங்களில் சந்தேக நபர் சிறுமியை பல நபர்களுடன் தொடர்புபடுத்தியுள்ளார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை மொரட்டுவ நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-4)

# திறன் விருத்திக்கு புதிய செயலாளர்

கொழும்பு, ஜூன் 10

திறன் விருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்துறை இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக தீபா லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவிடம், அவர் தனது நியமனக் கடிதத்தை நேற்றுமுன்தினம் பெற்றுக்கொண்டார். தீபா லியனகே இலங்கை நிர்வாகச் சேவையின் விசேட வகுப்பு அதிகாரி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 10

மிளகுச்சேனைக்குள் அனுமதியின்றி நுழைந்த நபர் மீது, உரிமையாளர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மாத்தளை ரத்தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

மிளகுச்சேனையின் உரிமையாளரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார். இதனையடுத்து அவர் துப்பாக்கியுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். காட்டுப்பன்றி என எண்ணியே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டேன் என்று அவர் விசாரணைகளில் தெரிவித்துள்ளார். (ம-4)

# தபால் சேவைகள் மட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 10

தபால் சேவைகள் சில மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரட்ண தெரிவித்துள்ளார். நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அனைத்து தபால் அலுவலக ஊழியர்களையும் பணிக்கு அழைக்க முடியாது. எனவே தெரிவுசெய்யப்பட்ட சில சேவைகள் மட்டுமே செயற்படுத்தப்படும்.

சாதாரண தபால் விநியோகம் மற்றும் முத்திரை வழங்கல் போன்ற சேவைகளை மேற்கொள்ள போதிய ஊழியர்கள் இல்லை. ஓய்வூதியம் செலுத்துதல், மருந்துகள் விநியோகம் மற்றும் பொதிகள் விநியோகம் ஆகியவை மட்டுமே தற்போது செயற்பாட்டில் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

### தரம் ஒன்று அனுமதி

# விண்ணப்பிக்கும் காலக்கெடு ஜூலை 31 வரையில் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 10

2022ஆம் ஆண்டில் முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக விண்ணப்பிக்கும் காலக்கெடு ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல இடங்களில் மாணவர்களின் பாடப்புத்தகங்கள் அழிவடைந்துள்ளன. அத்தகைய மாணவர்களுக்கு புதிய பாடப்புத்தகங்களை வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். மாணவர்கள் பாடசாலை அதிபருக்குத் தெரியப்படுத்தி அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அமைச்சுக்கு தெரியப்படுத்த வேண்டும் - என்றார். (ம)

# போலி அழைப்புக்களால் மோசடிகள் அதிகரிப்பு!

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 10

மின்னஞ்சல் மற்றும் அலைபேசி, தொலைபேசி அழைப்புகளுக்கு மேற்கொள்ளப்படும், போலியான அழைப்புக்களை நம்பி, பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

உங்களுக்கு பரிசுப்பொருள்கள் கிடைத்துள்ளன. அதனைப் பெற்றுக்கொள்ள கட்டணம் செலுத்துமாறு மின்னஞ்சல் மற்றும் அலைபேசி அழைப்புகள் ஏற்படுத்தப்பட்டால், அது தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள் என்று பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ம-4)

# நடுக்கடலில் மீனவர் அவதி

கொழும்பு, ஜூன் 10

பலநாள்கள் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்றிருந்த மீனவர் ஒருவர் சுகவீனமுற்ற நிலையில் நடுக்கடலில் அவதிப்பட்டார். அவர் கடற்படையினரின் உதவியுடன் கரை சேர்க்கப்பட்டார்.

பேருவளைக்கு தென் மேற்காக 55 கடல் மைல் தொலைவில் உள்ள ஆழ்கடலில், பலநாள்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மீனவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டது. இதனையறிந்த கடற்படையினர், அவரை மீட்டு காலி துறைமுகத்துக்குக் கொண்டு வந்தனர். அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ம-4)

### பேர்ள் கப்பலால்

# கடல் ஆமைகளின் உயிருக்கு அச்சுறுத்தல்

## நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 10

இலங்கைக்கே உரித்தான சில ஆமை இனங்களின் உயிருக்கு, பேர்ள் கப்பலின் இரசாயன மற்றும் பிளாஸ்டிக் துண்டுகள் உலை வைத்துள்ளன என நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 10 நாள்களில் 19 ஆமைகள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன. இலங்கைக் கடற்பரப்பில் 5 வகையான ஆமைகள் வாழ்கின்றன. அவற்றில் பசுமை கடல் ஆமை மற்றும் ஒலிவ் ரிட்லி கடல் ஆமை இனங்களே உயிரிழந்து ஒதுங்கியுள்ளன.

எம்வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து கடலினுள் கவிழ்ந்த கொள்கலன்களிலிருந்து வெளியேறிய பிளாஸ்டிக் துகள்களில், சுமார் 600 தொன் இதுவரை கடற்கரையோரங்களில் சேகரிக்கப்பட்டுள்ளன. இதனைவிட மிகப்பெரிய அளவு கடலினுள் கலந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இதன் காரணமாக எதிர்காலத்தில் இலங்கையின் கடல் வாழ் உயிரினங்களுக்கு குறிப்பாக கடல் ஆமை இனங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பேரழிவு தொடர்பில் குற்றவியல் விசாரணை ஆரம்பமாகியுள்ளதால், உயிரிழந்த ஆமைகளின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,இ)





# சேதன விவசாயத்தை ஊக்குவிக்க திருமலையில் விசேட கலந்தாய்வு

திருமலை, ஜூன் 10

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட பசுமையான சமூகப் பொருளாதார கொள்கைக்கமைவாக சேதன விவசாயத்தை ஊக்குவித்தல் தொடர்பான விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் உள்ள சேதனப்பசளை உற்பத்தியாளர்களைப் பதிவுசெய்து அவர்களுக்கு அவசியமான தொழிநுட்ப மற்றும் ஏனைய வழிகாட்டுதல்களை வழங்கி மாவட்டத்தின் கேள்விக்கேற்ற சேதனப்பசளையை உள்ளூரிலே உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதே கூட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தது. கூட்டத்தில் மாவட்டச் செயலர், மேலதிக மாவட்டச் செயலர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கே.குகதாசன், துறைசார் திணைக்களத் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விரைவில் மீள்பரிசீலனை செய்க

## 9 நாடுகளின் தூதுவர்கள் வலியுறுத்து

**கொழும்பு,ஜூன் 10**

**இலங்கை அரசு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை, தாமதமின்றி மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின், ஒன்பது நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள கவிஞர் மற்றும் ஆசிரியரான அஹ்னாப் ஜஸீம் விடுதலை செய்யப்பட வேண்டும்.

குற்றமற்ற அல்லது வழக்குத் தொடராமல் அப்பாவி மக்களை 18 மாதங்கள் வரை தன்னிச்சையாக தடுத்து வைக்க அனுமதிக்கும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அஹ்னாப் ஜஸீம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான எந்தவொரு சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கான அரசின் உறுதிப்பாட்டுடன் முழுமையாக இணங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பிரிட்டன், எஸ்தோனியா, ஸ்பெயின், ஜேர்மனி, பின்லாந்து, பிரான்ஸ், லக்சம்பர்க், நெதர்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின், மனித உரிமை தூதுவர்கள் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை அஹ்னாப் ஜஸீமின் விடுதலையை ஆதரித்து, சர்வதேச மனித உரிமைகள் குழு, கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையின் இன மற்றும் மத சிறுபான்மையினருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் இந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டியிருந்தது.

(ம-4)



# மஹிந்த ஓய்வு நாமல் களத்தில்?

கொழும்பு,ஜூன் 10

அரசியலிலிருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஓய்வுபெற்றதும், தனது இடத்துக்கு தன்னுடைய மகன்களில் ஒருவரான அமைச்சர் நாமல் ராஜபக்சவை களமிறக்கத் தீர்மானித்துள்ளார்.

இதன் முதற்படியாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் முக்கிய பதவியொன்று நாமலுக்கு வழங்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-4)

# கொரோனா விவகாரத்துக்குள் நாமல் ராஜபக்ச தலையீடு

## ஜே.வி.பி. விசனம்

கொழும்பு, ஜூன் 10

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்குள், அமைச்சர் நாமல் ராஜபக்ச தலையீடு செய்வது எதற்கு? அவருக்கும் இதற்கும் என்ன தொடர்பு? என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில்,

தேசிய அளவில் தடுப்பூசியை செலுத்துவது தொடர்பில் இடம்பெற்ற இராஜாங்க அமைச்சர்களின் அலரிமாளிகைக் கூட்டத்தில் நாமல் ராஜபக்சவும் கலந்துகொண்டுள்ளார். சுகா



தார அமைச்சருக்கு அப்பால் மூன்று அமைச்சர்கள் சுகாதாரத்துறைக்குப் பொறுப்பாகவுள்ளனர்.

நாமல் ராஜபக்சவுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அவரின் பங்களிப்புத் தொடர்பில் சந்தேகம் உள்ளது - என்றார். (ம-4)

# நாய்களின் குரைப்புக்கு ஒருபோதும் அஞ்சேன்

## சரத் வீரசேகர கொக்கரிப்பு

கொழும்பு, ஜூன் 10

நிலவைப் பார்த்து நாய்கள் குரைக்கும். நரிகள் ஊளையிடும். எனவே எனக்கெதிரான பொய்ப் பிரசாரங்கள், சேறுபூசும் நடவடிக்கைகளால் நான் தளர்ந்து போய்விட மாட்டேன் இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்ட சிலரை மீண்டும் திரும்ப அழைத்து வரவில்லை. அதற்காக



நான் எவருக்கும் எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை. தனிமைப்படுத்த அழைத்துச்செல்லப்பட்ட நபர்களுக்கு ஆடைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை மட்டுமே நான் வழங்கினேன். இது மனிதாபிமான [illegible]

பட்ட நடவடிக்கை. என்னை மாத்திரமல்ல எனது மகனையும் சம்பந்தப்படுத்தி, பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். அந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் முற்றிலும் பொய்யானவை. 45 ஆண்டுகள் இராணுவ மற்றும் அரசியல் வாழ்க்கையில் எப்போதும் சட்டவிரோத நடவடிக்கைகளுடன் நான் சம்பந்தப்பட்டதில்லை. எமது நாடு தொடர்பில் நான் வெட்கப்படுகிறேன். விடுதலைப் புலிகளால் நான் அவமதிக்கப்படவில்லை, ஆனால் [illegible] அவம[illegible] - என்றார். (ம-4)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதானவர்களுக்கு தனியிடம்

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 10

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை தொடர்ந்தும் தடுத்து வைக்கும் இடங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதற்கமைவாக கொழும்பிலுள்ள பயங்கரவாதத்தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு ஆகியவற்றில், கைதானவர்களைத் தடுத்து வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலக்கம் - 145, கிருலப்பனை அவன்யூ, கொழும்பு - 5, கிருலப்பனை பொலிஸ் பிரிவு ஆகிய இரு இடங்களிலேயே இவ்வாறானவர்கள் தடுத்து வைக்கப்படுவர் என்று விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

# அனைத்து உரங்களும் இலங்கையில் உற்பத்தி?

கொழும்பு,ஜூன் 10

நாட்டுக்குத் தேவையான அனைத்து உரங்களையும் இலங்கையில் உற்பத்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விதை உற்பத்தி மற்றும் உயர் தொழிநுட்ப கமத் தொழில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக துறைசார் நிபுணர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக எதிர்காலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான கரிம உரங்களை வழங்க முடியும். கரிம உற்பத்திக்குத் தேவையான பின்னணியையும் அரசு தயார் செய்து தரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# கொள்கையை மறந்தார் ரணில்

## ராஜித விசனம்

கொழும்பு, ஜூன் 10

தேர்தலில் தோல்வியுற்றவர்களுக்கு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல வாய்ப்பளிப்பதில்லை என்ற கொள்கையை ரணில் விக்கிரமசிங்க மீறியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் உடன்படிக்கை பிரகாரம் தமது கட்சியில் தோல்வியுற்ற எவரையும் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு ரணில் அனுமதித்திருக்கவில்லை. ரோசி சேனாநாயக்க இதனால் கடந்த தடவை நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பை இழந்திருந்தார்.

இந்த நிலையில் பொதுத்தேர்தலின் பின்னர் இந்த விவகாரத்தில் விடாப்பிடியாக இருந்தார் ரணில், தற்போது தனது நிலைப்பாட்டை மாற்றி, ஐக்கிய தேசியக் கட்சிக்கான தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றுக்குச் செல்லவுள்ளார். இது தொடர்பிலேயே ராஜித தனது விமர்சனத்தை வெளியிட்டுள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தனிமைப்படுத்தல் மீறல் 26,000 பேருக்கு வழக்கு

கொழும்பு, ஜூன் 10

கொரோனாத் தொற்றுக் காலத்தில், தனிமைப் படுத்தலை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்களில், சுமார் 26 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது, இதுவரை 26 ஆயிரத்து 920 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றும் ஆயிரத்து 34 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# தடுப்பூசிக் கொள்வனவில் எவ்வித தாமதமுமில்லை

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 10**

**தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யும் திட்டத்தில், அரசோ, சுகாதாரத் துறையினரோ எவ்வித தாமதத்தையும் ஏற்படுத்தவில்லை என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

நாடாளுமன்றில், நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தொடர்ச்சியாக எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். எனினும் எந்த இடத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதென்பதை தெளிவாகக்கூற மறுகின்றனர். எதிர்க்கட்சியினரின் இந்தக் குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கின்றேன். தடுப்பூசிகள் தொடர்பில் கடந்த ஓகஸ்ட் மாதமளவில் பேச்சுக்கள் ஆரம்பமாகியிருந்த சந்தர்ப்பத்தில், உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இலங்கைக்குத் தேவையான தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்வதற்கும் பேச்சு நடத்தப்பட்டது.- என்றார். (ம-4)

## புத்தாண்டுக் கொத்தணி ஒரு லட்சத்து 10 ஆயிரம்

கொழும்பு, ஜூன் 10

புத்தாண்டுக் கொத்தணியால் மாத்திரம் ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 612 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என கொரோனா செயலணி தெரிவித்துள்ளது.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலைக் கொத்தணியால் 3 ஆயிரத்து 59 பேரும், அதனைத் தொடர்ந்து பேலியகொட மீன் சந்தைக் கொத்தணியால் 87 ஆயிரத்து 578 பேரும் தொற்றுக்குள்ளாகினர் என்று குறிப்பிட்டுள்ளது. (ஒ.5,இ)

## அஸ்ராஜெனகா இரண்டாவது 'டோஸ்' 6 மாதங்களின் பின்னரும் வழங்கலாம்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 10

அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதல் டோஸுக்கும் இரண்டவாது டோஸுக்கும் இடையிலான இடைவெளி 6 மாதங்கள் வரையில் இருக்கலாம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

'முதல் டோஸ் ஏற்றப்படுவதன் ஊடாக உருவாகும் நோய் எதிர்ப்பு சக்தி வளர்ச்சி சிறிது காலத்தின் பின்னர் குறைவடைகின்றது.

அப்போதுதான் இரண்டாவது டோஸ் ஏற்றவேண்டும். அஸ்ராஜெனகாவின் முதலாவது டோஸ் ஏற்றி நான்கு வாரங்களின் பின்னர் இரண்டாவது டோஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அஸ்ராஜெனகாவின் முதலாவது டோஸின் வீரியம் 4 மாதங்கள் வரை குறையவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆகப் பிந்திய ஆய்வுகளின் பிரகாரம் முதலாவது டோஸ் ஏற்றி 6 மாதங்களின் பின்னர் இரண்டாவது டோஸை ஏற்றலாம்' என்று கண்டறியப்பட்டுள்ளது என சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (ஒ.5,இ)

## சிறுவர்களுக்கு காய்ச்சலெனில் அவதானம்

கொழும்பு, ஜூன் 10

சிறுவர்களுக்கு மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், விரைவில் மருத்துவரை சந்திக்க வேண்டும் என்று சிறுவர்கள் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு மற்றும் கொரோனாத் தொற்றின் பொதுவான அறிகுறி காய்ச்சல். அத்துடன் வைரஸ் காய்ச்சலும் ஏற்படும். தற்போது நிலவும் அசாதாரண வானிலை காரணமாக, சிறுவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படக்கூடும். டெங்குக் காய்ச்சல் கூடுதலாக இருக்கலாம். எனவே பெற்றோர் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## மட்டு. கோறளைப்பற்றில் கொரோனாவால் ஐவர் சாவு

மட்டக்களப்பு,ஜூன் 10

கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த மூன்று நாள்களில் கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை ஆர்.டி.ஓ வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய கர்ப்பிணி பெண் ஒருவரும், பிறைந்துறைச்சேனை அறபா வீதியைச் சேர்ந்த 51 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருமாக இரண்டு பேர் உயிரிழந்தனர்.

திங்கட்கிழமை ஆர்.டி.ஓ வீதியைச் சேர்ந்த 80 வயதுடைய ஒருவர் மற்றும் 74 வயதுடைய அவரது மனைவி ஆகியோர் உயிரிழந்தனர்.

அத்துடன் வாழைச்சேனை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த 74 வயதுடைய ஒருவரும் இவ்வாறு கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-150)

## 9 யாசகர்களுக்கு கம்பளையில் கொரோனா

கொழும்பு, ஜூன் 10

கம்பளை நகரில் 9 யாசகர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கம்பளை நகரிலுள்ள இ.போ.ச. பஸ் தரிப்பிட வளாகத்தில் அதிகளவு யாசகர்கள் தங்கியுள்ளனர். இவர்களில் ஒருவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டதையடுத்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து கம்பளை இ.போ.ச. பஸ் தரிப்பிட வளாகத்திலுள்ள மேலும் 13 யாசகர்கள் நேற்று அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டது. தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ப-44)





## கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 10

கர்ப்பிணிகளுக்குக் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிலியந்தலை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை மையமாகக் கொண்டு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது. கர்ப்பிணிகளின் விருப்பத்திற்கேற்பவே தடுப்பூசி செலுத்தப்படும் என்று குடும்ப நல சுகாதாரப் பிரிவுப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய கர்ப்பிணிகள் பலர், கடந்த சில நாள்களில் உயிரிழந்த நிலையில், கர்ப்பிணிகளுக்கும் தடுப்பூசி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படும் தமிழ்க் குடும்பம்?

கொழும்பு, ஜூன் 10

ஆஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ள பிரியா- நடேஸ் குடும்பத்தினர், நியூசிலாந்து அல்லது அமெரிக்காவில் குடிய மர்த்தப்படக்கூடும் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களான பிரியா - நடேஸ் மற்றும் அவர்களது இரண்டு மகள்கள் கிறிஸ்மஸ்தீவு அகதிகள் முகாமில் மூன்று ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா அல்லது நியூசிலாந்தில் குடியமர்த்தப்படுவதென்பது 'ஆஸ்திரேலிய தடுப்பு முகாம்களில் மீள்குடியேற்றத்துக்காகக் காத்திருக்கும் அனைவருக்கும் பொருந்தும்.

எனவே இவர்களை அமெரிக்காவில் குடிய மர்த்துவதற்கே முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. நியூசிலாந்து இரண்டாவது தெரிவாக உள்ளது என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரியா-நடேஸ் தம்பதியின் இரண்டாவது மகள் தருணிகா மருத்துவச் சிகிச்சைக்காக பேர்த்துக்கு அழைத்து வரப்பட்டுள்ள பின்னணியில், தமது குடும்பத்தை குயின்ஸ்லாந்தில் வாழ அனுமதிக்குமாறு பிரியா வேண்டுகோள் விடுத்த சில மணிநேரங்களில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் கடந்த பத்து நாள்களாக தருணிகா கடும் காய்ச்சல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இதனை அடுத்து மேலதிக சிகிச்சைக்கு கிறிஸ்மஸ் தீவு மருத்துவர்கள் பரிந்துரைசெய்ததால் பேர்த்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# தொடர் முயற்சியின் வெற்றியே வவுனியா பல்கலைக்கழகம்

## மஸ்தான் எம்.பி. பெருமிதம்



**யாழ்ப்பாணம், ஜூன் 10**

**யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் என்ற பெயர் எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதியுடன் நீக்கப்பட்டு, ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வவுனியா பல்கலைக்கழகமென தரமுயர்த்தப்படுவதானது எமது தொடர் முயற்சிக்கு கிடைத்த அளப்பறிய வெற்றியாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை நாம் வவுனியா பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்துவதற்கு ஜனாதிபதி, பிரதமர், உயர் கல்வியமைச்சர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, மற்றும் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் மங்களேஸ்வரன் ஆகியோருடன் இது தொடர்பாக தொடர் முயற்சிகள் செய்துவந்தோம். இது இன்று எமக்கு வெற்றியளித்துள்ளது. எனது தொடர் முயற்சிக்கு பக்கபலமாக இருந்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துகொள்வதோடு மிக முக்கியமாக எமது நாட்டின், ஜனாதிபதி மற்றும் பிரதமர், உறுதுணையாக இருந்த உயர்கல்வி அமைச்சர்கள் மற்றும் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் உட்பட வளாகத்தின் அனைத்து தரப்பினருக்கும் விசேடமாக எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் ஓகஸ்ட் முதலாம் திகதிக்குப் பின்னர் வவுனியா பல்கலைக்கழகமானது, தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிகளில் விசேடத்துவத்தை அபிவிருத்திசெய்யும் இயல்திறனுடன் திடமான ஒரு அடிப்படையைக் கொண்ட கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் தூரநோக்குடன் செயற்படவேண்டும் -என்றுள்ளது. (ப)



# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

மட்டக்களப்பு, ஜூன் 10

சிறைச்சாலையில் மனிதநேயமற்ற வகையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உரியவர்கள் நடவடிக்கையெடுக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு சென்று அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தோம். ஆனாலும், தற்போதுள்ள கொவிட் சூழலில், சிறையில் உள்ளவர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதியில்லையென்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த காலத்தில் பலர் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இந்தச் சிறைச்சாலையில் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் மாதத்துக்குப் பின்னர் விடுதலைப்புலிகளின் புகைப்படங்களை தங்களது முகப்புத்தகங்களில் பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சிலரும், இலங்கை அரசால் படுகொலைசெய்யப்பட்ட தங்களது உறவுகளை நினைவுகூர்ந்தமைக்காக கடந்த மே-18 ஆம் திகதி 10 பேரும் கைதுசெய்யப்பட்டு அந்தச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அதனைவிட மேலும் சிலர் சில குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் சுகாதார நிலையென்ன என்பன தொடர்பில் அவர்களின் குடும்பத்தினர் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டமானது தமிழ் மக்களை ஒடுக்குவதற்காக இலங்கை அரசால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அப்பட்டமாக தமிழர்களின் ஜனநாயக உரிமையை நசுக்குவதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கை அரசு பயன்படுத்துகிறது. மனிதநேயமற்ற வகையில் பொலிஸார் இவர்களைக் கைதுசெய்து மோசமான கொடிய சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளனர். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா.பேரவைக் கூட்டத் தொடரில் 46:1 தீர்மானத்தை தமிழர் தரப்பைப் பயன்படுத்தி நிறைவேற்றியதன் மூலம் சர்வதேச விசாரணைக்கு செல்வதிலிருந்து தப்பித்துக்கொண்டுள்ளனர். தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது. இதனை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த நிலைமைகளை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ப)

# கால்நடைகளுக்கு தேவையான தீவனத்தை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுங்கள்

## மாவட்டச் செயலர்களுக்கு செல்வம் எம்.பி. கடிதம்



மன்னார், ஜூன் 10

வன்னி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் பண்ணையாளர்கள் ஆகியோர், தமது கால்நடைகளுக்கான தீவனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே அவற்றுக்கான தீவனத்தைப் பெற்றுக்கொடுக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில், மன்னார்,வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களின் செயலர்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

வீட்டில் கால் நடைகளை வளர்த்து வரும் கால்நடைப் பண்ணையாளர்கள் குறிப்பாக பால் தரும் நல்லின பசு மாடுகள் வளர்ப்பை வாழ்வாதாரமாகக்கொண்டு அதனூடாகப் பெறப்படுகின்ற வருமானத்திலேயே தங்களது நாளாந்த வாழ்க்கையை நடத்தி வருகின்ற மக்கள் இந்தப் பயணத்தடையால் மாடுகளுக்குரிய தீவனத்தைப் பெற முடியாமையால் சிரமப்படுகிறார்கள். தீவனக் கடைகள் பூட்டப்பட்டுள்ளமையால் கால்நடைகளுக்குரிய தீவனத்தைப் பெற முடியாதுள்ளது.

இதனால் கால்நடைகளுக்கு உரிய உணவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டு, அவர்களுக்கு இவ்வளவு காலமும் கிடைத்த வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதன் விளைவாக உரிமையாளர்கள் தங்களுடையதும், தங்களைச் சார்ந்து வாழ்பவர்களுடையதும் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே மக்கள் அத்தியாவசிய தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டது போன்று தீவனக் கடைகளையும், திறந்து பொருள்களை விற்பனை செய்ய உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டால் சாலச் சிறந்ததாக அமையும்- என்றுள்ளது. (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 10 ஆயிரம் ரூபா உலருணவுப்பொதியில் 1000 ரூபா மரக்கறியை காணவில்லை

## தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் கவலை

**கிளிநொச்சி, ஜூன் 10**

**கொவிட்– 19 காரணமாக தனிமைப்படுத்தப்படுகின்ற குடும்பங்களுக்கு அரசால், கூட்டுறவு அமைப்புக்கள் மூலம் வழங்கப்படுகின்ற 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளில் மரக்கறிக்கு என ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளபோதும் பொதுமக்களுக்கு அந்த பெறுமதியில் மரக்கறிகள் வழங்கப்படுவதில்லை என பொதிகளைப் பெற்றுக்கொண்ட பல குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளன.**

கிராமங்களில் கொவிட் - 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் விவரங்கள் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கூட்டுறவு அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் ஊடாக 10 ஆயிரம் ரூபா உலருணவுப் பொதி வழங்கப்படுகிறது. இந்தப் பொதியில் அரிசி, மா, சீனி, பருப்பு, உப்பு மற்றும் தேயிலை போன்ற 15 அத்தியாவசியப் பொருள்கள் அடங்குகின்றன. இதில் மரக்கறிக்கு ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலும் வழங்கப்படுகின்ற பொதிகளில் இரண்டு கிலோவுக் குட்பட்ட பெரிய வெங்காயம், உருளைக் கிழக்கு மற்றும்



| இல | பொருட்கள் | அளவு | ஒன்றின் விலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | [illegible] | 20kg | 140.00 | [illegible] |
| 2 | [illegible] | 10kg | 85.00 | [illegible] |
| 3 | [illegible] | 4kg | 205.00 | [illegible] |
| 4 | [illegible] | 4kg | 117.00 | [illegible] |
| 5 | [illegible] | 2kg | 320.00 | [illegible] |
| 6 | [illegible] 400g | 4 | 370.00 | [illegible] |
| 7 | தேயிலை | 0.400g | 800.00 | [illegible] |
| 8 | [illegible] | 2 | 42.00 | [illegible] |
| 9 | [illegible] | 0.500g | 660.00 | [illegible] |
| 10 | [illegible] 1Kg | 2 | 180.00 | [illegible] |
| 11 | [illegible] | 1kg | 550.00 | 550 |
| 12 | [illegible] | 2 | 56.00 | [illegible] |
| 13 | [illegible] | 0.500g | 340.00 | 170 |
| 14 | [illegible] | 2 | 8.00 | 16 |
| 15 | மரக்கறி வகை | | 1,000.00 | 1,000.00 |
| | மொத்தம் | | | 10,000.00 |

பூசணிக்காய் என்பனவே வழங்கப்படுகின்றன. இவற்றுக்கே ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் பொதுமக்கள், இவற்றின் பெறுமதி ஆயிரம் ரூபா அல்ல எனவும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கரைச்சி பிரதேச செயலாளரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது;

"கூட்டுறவு அமைப்புக்கள் ஊடாக வழங்கப்படுகின்ற பொதியில் பொருள்கள் உரிய விலையிலும் தரத்திலும் இருக்க வேண்டும் என்பது கட்டாயம். அவ்வாறு உரிய விலைக்கும் தரத்துக்கும் பொருள்கள் வழங்கப்படவில்லை எனில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (ப-214)



# சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து தப்பித்தவர் வசமாகச் சிக்கினார்

## கச்சாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து கொண்டு சென்ற உழவு இயந்திரத்தின், முன்பக்கச் சில்லு ஒன்று உடைந்ததால், அதில் சென்ற ஒருவர் இராணுவத்தினரிடம் வசமாகச் சிக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கச்சாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் பகுதியில், சட்டவிரோத மணல் அகழ்வில் உழவு இயந்திரம் ஒன்று ஈடுபட்டு வருகின்றது, என்று இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. சம்பவம் தொடர்பில் குறித்த பகுதிக்கு இராணுவத்தினர் சென்ற போது மணல் கடத்தல் கும்பல் உழவு இயந்திரத்தை செலுத்தி, தப்பி ஓட முற்பட்டுள்ளது. இதன்போது உழவு இயந்திரத்தின் முன்பக்க சில்லில் ஒன்று உடைந்ததால், அதில் இருந்த ஒருவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-20)



# பயணத் தடையின்போதும் வீடுகளுக்கு புகுந்து திருட்டு

## யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழில் பயணத் தடை வேளையில் வீடுகளுக்குள் புகுந்து திருட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கச்சேரி-நல்லூர் வீதியில் உள்ள வீடொன்றின் ஜன்னலை உடைத்து, வீட்டினுள் சென்று மடிக் கணினி, கைத்தொலைபேசி மற்றும் துவிச்சக்கர வண்டி என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் சாவகச்சேரி மற்றும் குருநகர் பகுதிகளைச் சேர்ந்த இருவர், யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் போது குறித்த நபர்கள் மேலும் ஒரு வீட்டில் திருட்டில் ஈடுபட்டனர் என்றும், அங்கும் மடிக் கணினி மற்றும் கைத்தொலைபேசி போன்ற சில பொருள்களைத் திருடினர் என்றும் தெரியவந்துள்ளது. அவர்களிடமிருந்து இரண்டு மடிக் கணினி இரண்டு கைத்தொலைபேசிகள், இரண்டு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் ஆகியன மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (ப-20)

## மன்னார் மாவட்டத்தில்

# 100 வயதைக் கடந்தோர் என்று எவரும் இல்லை

## மாவட்டச் செயலர் கவலை

மன்னார்,ஜூன் 10

இலங்கையில் 100 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏனைய மாவட்டங்களில் ஓரிருவர் இருக்கின்ற போதும், மன்னார் மாவட்டத்தில் மட்டும் எவரும் இல்லை என்பது கவலைக்குரிய விடயம். இதற்கு காரணம் நாம் நஞ்சு கலந்த உணவு வகைகளை உண்பதே ஆகும் என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர் பிரதேச செயலக பிரிவிலுள்ள இயற்கை பசளை உற்பத்தி செய்யும் இடங்களை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த வாரம் முதல் எமது நாட்டிலே நூறு வயதினருக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் விபரத்தை நான் ஆராய்ந்தபோது இலங்கையில் மன்னார் மாவட்டத்தை தவிர ஏனைய மாவட்டங்களில் ஓரிருவராவது இவ்வாறான வயதுடையோர் காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது. இதற்கு ஒரு காரணம் நாம் இயற்கைக்குள் இருந்து விலகி செயற்கைக்குள் சென்றுள்ளதும் ஆயுள் குறைவுக்கும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆகவே நாம் எமது புராதன நிலைக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்ற ஒரு கட்டத்தில் இருக்கின்றோம். இப்பொழுது நாம் அதிகமாக நஞ்சு கலந்த உணவு வகைகளையே உண்டு வருகின்றோம். இதன் மூலம் புதிய புதிய நோய்களுக்கும் நாம் உள்ளாகி வருகின்றோம். ஆகவே நாம் இயற்கை பசளைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகளை உண்டு நாம் தேக ஆரோக்கியத்துடன் வாழ முனைவோம். இதற்கு எமது கமநல சேவை திணைக்களம் உதவிகள் புரியும் - என்றார். (ஜ-60)





# சிகிச்சைக்காக நீண்டநேரம் காத்திருக்கும் நோயாளர்கள்

## ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் இந்த நிலை

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில், நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளது என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ச.சத்திய சுதர்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள், வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் மருத்துவருக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளது. நீண்ட நேரம் காத்திருந்த நோயாளர்கள் மருத்துவர் எங்கே என ஊழியர்களிடம் கேட்கின்றபோது, மருத்துவர், விடுதியில் உள்ளார் என்று பதில் அளிக்கப்படுகின்றது. கொவிட் 19 அச்சுறுத்தல் காரணமாக பயணத் தடைகளுக்கு மத்தியில் ஒட்டுசுட்டான் மருத்துவமனையை நம்பிச் செல்கின்ற நோயாளர்களை நீண்ட நேரம் காத்திருக்க வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மாவட்டத்தின் ஏனைய மருத்துவமனைகளில், மருத்துவர்கள், கொவிட் 19 அச்சுறுத்தல் காரணமாக நோயாளர்களுக்குரிய சிகிச்சைகளை விரைவாக வழங்கி வீடுகளுக்கு அனுப்பிவைக்கின்றனர். இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துமனையில், மருத்துவருக்காக காத்திருந்து நோயாளர்கள் சிகிச்சை பெறாமலே வீடு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இது தொடர்பாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருசுவில் பிள்ளையார் கோவிலை இடித்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

## அகில இலங்கை இந்துமாமன்றம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜுன் 10

**சைவமக்களின் வழிபாட்டுத் தலங்களை அழிக்க முற்படும் அநாகரீக செயற்பாடு வேதனை தருகிறது. எனவே மிருசுவில் பிள்ளையார் கோவிலை இடித்தவர்கள்மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை இந்துமாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.**

வீதியோரத்தில் உள்ள மிருசுவில் பிள்ளையார் கோவில் இனந்தெரியாதோரால் நேற்று அதிகாலையளவில் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்துமாமன்றத்தின் உப தலைவர் ஆறு.திருமுருகன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது; மிருசுவிலில் மிக நீண்டகாலமாக மக்கள் வழிபாடுசெய்த பிள்ளையார் கோவில் அடித்து நொருக்கப்பட்டுள்ளமை மிக வேதனைதரும் செய்தியாகும்.

இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மற்றும் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை சைவமக்கள் சார்பில் வேண்டுகிறேன். சமீபகாலமாக மன்னார் மாவட்டத்தில் பல சைவக் கோவில் விக்கிரகங்களை உடைத்து சைவமக்களை வேதனைப்படுத்தும் சம்பவம் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் மிருசுவில் ஆலயம் அழிக்கப்பட்டுள்ளமை திட்டமிட்டு தொடரும் நிகழ்வாகவே கருதவேண்டியுள்ளது.

இந்த நாட்டில் சுதேசிகளின் புராதன சமயமாக விளங்கும் சைவசமயத்துக்கு தீங்கிழைப்பவர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ)



## புறக்கோட்டையில் தீ

கொழும்பு, ஜுன் 10

புறக்கோட்டை டாம் வீதியில் உள்ள 5 மாடிக்கட்டடமொன்றில் நேற்று அதிகாலை, திடீர் தீப்பரவல் ஏற்பட்டது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, 3 தீயணைப்பு வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன என்று தீயணைப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில், கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)



## கசிப்பு காய்ச்சியோர் காரைநகரில் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 10

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் வீடொன்றுக்குள் கசிப்புக் காய்ச்சி விற்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டுக்குள் வைத்து நூதனமான முறையில் அவர்கள் இந்த சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதையடுத்து அந்தப் பகுதி கிராம அலுவலரின் அதிரடி நடவடிக்கையால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## வீதியோரப் பிள்ளையார் ஆலயம் இனந்தெரியாதோரால் இடித்தழிப்பு

கொடிகாமம், ஜுன் 10

பயணத்தடை நடைமுறையில் உள்ளவேளையில் வீதியோரத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் ஆலயம் ஒன்று இனந்தெரியாதோரால் இடித்து அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 வீதியில் கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயமே இவ்வாறு இடிக்கப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டைக் கடந்து ஆலயமாக விளங்கிய இவ் ஆலயத்தை இடித்தவர்கள், சட்டத்தின் முன்நிறுத்தி வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-159,9)

## அலுவலகம் வராத கிராம அலுவலர்!!!

### மக்கள் அவதி

கிளிநொச்சி, ஜுன் 10

கடமையில் ஈடுபடத்தவறிய குற்றச்சாட்டில் கிருஸ்ணபுரம் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கரைச்சி பிரதேச செயலர் பாலசுந்தரம் ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர் கடமை நேரத்தில் அலுவலகத்துக்கு சமுகம் தருவதில்லை எனவும், தமது தேவைகளுக்காக அலுவலகம் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகிறோம் என பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். சுமார் 3 மாதமாக குறித்த கிராம அலுவலர் அலுவலக கடமையை முறையாக மேற்கொள்வதில்லை எனவும் பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் நேற்றையதினம் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை அலுவலக கடமை என குறிப்பிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 10 மணிவரை அவர் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை.

இவ்வாறான நிலையில் குறித்த விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச செயலர் பாலசுந்தரம் ஜெயகரனின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. குறித்த முறைப்பாட்டை அடுத்து பிரதேச செயலர் களப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டார்.

இது தொடர்பில் பிரதேச செயலர் தெரிவிக்கையில்,

குறித்த கிராம அலுவலரை விசாரணைகளுக்காக பிரதேச செயலகத்துக்கு அழைத்துள்ளோம். குறித்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ஐ-113)



## உப்புமாவெளியில் மணற்குவியல்; பொலிஸாரால் வழக்குத் தாக்கல்

முல்லைத்தீவு, ஜுன் 10

முல்லைத்தீவு உப்புமாவெளி பிரதேசத்தில் ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணியில் குவிக்கப்பட்டுள்ள மணற்குவியல்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை ஆராய்ந்த நீதிவான், மணல் அகழ்வுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை உப்புமாவெளியில் மணல் குவிக்கப்பட்டுள்ள பகுதிகளை நேற்றையதினம் கனியவளத் திணைக்களத்தின் அதிகாரிகள் பார்வையிட்டதுடன் குறித்த மணல் அகழ்வுக்கான அனுமதி பெறப்படவில்லை என்றும்,

இது தொடர்பில் அறிக்கை அனுப்பப்படும் எனவும் முல்லைத்தீவு பொலிஸாருக்கு அவர்கள் தெரிவித்தனர். (ஐ-13)

## வாக்காளர் பட்டியலை இணையத்தில் பெறலாம்

கொழும்பு, ஜுன் 10

2022ஆம் ஆண்டு முதலாம் வகுப்புக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு தேவையான வாக்காளர் பட்டியல் தகவல்களை, தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையான வாக்காளர் பட்டியல் தகவல்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் அவற்றை கிராம உத்தியோகத்தரிடம் அல்லது வேறு அதிகாரிகளிடமோ உறுதிப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட உணவுக்காக மட்டி பொறுக்கும் மக்கள்

## மன்னாரில் இந்த நிலை

**மன்னார், ஜூன் 10**

**நாடளாவிய ரீதியில் நீண்ட நாள்களாக அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை காரணமாக அன்றாடக் கூலித் தொழிலில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மன்னார் மாவட்டத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.**



இந்த நிலையில் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில், சில குடும்பங்கள் கடற்கரையோரப் பகுதியில் உள்ள நீரில் மட்டி பொறுக்கி தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பயணத்தடை ஒரு புறம் மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்துவரும் நிலையில், அதிகரித்த விலையில் மரக்கறிகள் மற்றும் இதர பொருள்கள் விற்கப்பட்டு வருவதாலும் மீன்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுவதாலும் நடுத்தரக் குடும்பங்கள் உட்பட அதிகமானோர் கடற்கரையோரப் பகுதியில் சேற்றுக்கு நடுவில் காணப்படும் மட்டியைச் சேகரித்து உணவுத் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர்.

இதேவேளை சிலர் மட்டியில் இருந்து சேகரித்த சதைகளை விற்பனை செய்தும், தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துகின்றனர். (ப-56)

## நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் அதிகார சபையினர் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர், நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் விலை தொடர்பான கள ஆய்வில் நேற்று ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டச் செயலரின் கட்டளைக்கமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அலுவலர்கள் ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் விலை தொடர்பான கள ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இதன்போது விலை காட்சிப்படுத்த வேண்டும் என்ற அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. மேலும் ஒன்லைன் மூலம் வீடுகளுக்கு பொதிசெய்யப்பட்ட பொருள்களை விநியோகிக்கும் வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன. விலை தொடர்பான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டமையுடன் அவற்றுக்குத் தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன என்று பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்தனர். (த-20)



## ஐந்து பேருடன் நடைபெற்ற நாகதம்பிரான் பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு பூதன்வயல் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு வேம்படி நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை ஐவரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

இந்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெறும் பொங்கல் விழா இம்முறை கொரோனாத் தொற்றுக் காரணமாக ஐந்துபேரின் பங்குபற்றுதலுடன், சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்பட்டு அமைதியான முறையில் நடைபெற்றது. (ஜ-246)

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### வாயில்..

ஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

உரும்பிராய் சிவகுலம் வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே கைதுசெய்யப்பட்டவராவார்.

விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-20,26)

### ஆசிரியர்...

பயன்படுத்தலாம் என்றும் அவர் ஆலோசனை வழங்கினார்.

2021ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு நடைபெறும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில், வடக்கு மாகாணஆளுநர் தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. அதன்போதே, ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் விசேட தேவைகளையுடைய குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், 2006 இல் 19 மற்றும் அதன் திருத்தம் 2017 இல் 25 இன் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக கொவிட்-19 இடர் காலத்தில் அனைத்து அரச நிறுவன நடவடிக்கைகளையும் மின் ஊடகத்தின் மூலமாக தடையின்றி முன்னெடுக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன், முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை விசேடமாக கண்காணிக்குமாறும் சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் செயலருக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் மருத்துவர் ஓய்வு விடுதி, தாதியர் ஓய்வு விடுதி மற்றும் நோயாளர் விடுதி அமைக்கப்படுகின்றபோது தற்போதைய அவசரதேவைப்பாட்டின் அடிப்படையில் குறிப்பாக தெல்லிப்பழை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களின் மருத்துவ கட்டட தேவைப்பாடுகளுக்கு இந்த ஆண்டில் முன்னுரிமை வழங்கி திட்டங்களை முன்னெடுக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும் இந்த வருடத்துக்கான திட்டங்களை ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் மேற்கொண்டு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய பயணத்தடைக் காலப்பகுதியில் கட்டட வேலைகளுக்கான மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் கட்டட ஒப்பந்தக்காரர்கள் சிரமங்களை எதிர்கொள்வதால் வேலைகள் தாமதமடைகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த கட்டட வேலைகளுக்கான மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் வர்த்தக நிலையங்களை குறிப்பிட்ட நேரத்துக்கு மாத்திரம் ஒப்பந்தக்காரர்கள் மூலப்பொருள்களை கொள்வனவுசெய்ய அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில் பிரதம செயலர், ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர். (த-20)

### தொற்று...

காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து 13 ஆயிரத்து 396 ஆக எகிறியுள்ளது. மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 125 அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 427 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)


## மரண அறிவித்தல்



**திருமதி வைரவநாதர் மகேஸ்வரி**

மந்துவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரவநாதர் மகேஸ்வரி அவர்கள் நேற்று (09.06.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற கதிர்காமு வைரவநாதரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயூரன் மற்றும், மதனிகா (சுவிஸ்), மயூரதன் (சாரதி), மதிவண்ணன் (இத்தாலி), மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்), கஜன், பிரதாபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கனிசியன், அன்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராசஇராசேஸ்வரி (சோதி)யின் அன்புச் சகோதரியும், கனகசிங்கம் காலஞ்சென்ற கதிரேசு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2021) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 145 7595


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வரலாற்றில் மிகப்பெரும்

# தேர்தல் மோசடி!

### ஆட்சி கைமாறுவது குறித்து இஸ்ரேல் பிரதமர் கருத்து

**டெல்அவிவ், ஜூன் 10**

**வரலாற்றில் மிகப்பெரிய தேர்தல் மோசடியை நாம் கண்டுகொண்டு இருக்கிறோம் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.**

2009ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் பிரதமராக நெதன்யாகு பதவி வகித்து வருகின்றார். இந்த நிலையில் நெதன்யாகு மீது ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை மோசடி முறைப்பாடுகள் கடந்த சில வருடங்களாக எழுந்து வந்தன.

நெதன்யாகு பதவி விலகக் கோரி ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளில் போராட்டங்களும் நடைபெற்று வந்தன. எனினும் தொடர்ந்து நெதன்யாகு தனது பதவியைத் தக்கவைத்து வந்தார்.

இந்த நிலையில் இஸ்ரேலில் அரபுக் கட்சி தலைமையில் 8 அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெதன்யாகுவின் ஆட்சிக்குத் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளன.

இதனை யேஷ் அடிட் கட்சியின் தலைவர் யேர் லேபிட் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டணிக் கட்சிகள் சுழற்சி முறையில் பிரதமர் பதவியைப் பகிர்ந்துகொள்ள உள்ளன. இதன்படி வலதுசாரி கட்சியான யாமினா கட்சியின் தலைவர் பென்னெட் பிரதமராகப் பதவி ஏற்பார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'நாம் இந்த இஸ்ரேல் நாட்டுடைய வரலாற்றில் மிகப்பெரும் தேர்தல் மோசடியைக் கண்டுகொண்டிருக்கின்றோம். மக்கள் இதை அனுமதிக்கக்கூடாது அமைதியாக இருக்கக் கூடாது' - என்றார். (ம)

### யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கு

# கூட்டிக்கழித்து வந்தது 4 லட்சத்து 34,000 ரூபா

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.மாநகர சபை அமர்வில் சில வருடங்கள் பங்குகொள்ளாமல் போனமைக்கான நிதியை வழங்குமாறு அதன் முதல்வர் மணிவ்ண்ணன் கோரியிருந்த நிலையில், கூட்டிக்கழித்து 4 லட்சத்து 34 ஆயிரம் ரூபா மணிவண்ணனின் வங்கிக் கணக்கு இலக்கத்துக்கு வைப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரான வி.மணிவண்ணன் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மாநகர சபைக்குத் தேர்வானபோதும் சபை எல்லைப் பரப்புக்குள் வதிவிடத்தைக் கொண்டிருக்கவில்லை என சபை எல்லைக்குள் வேட்பாளராகக் கொண்ட ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கின் அடிப்படையில் சபை அமர்வில் பங்குகொள்ள இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

இவ்வாறு இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட வழக்கில் சட்டத்தரணியாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முற்பட்டிருந்தார். அவர், 2020ஆம் ஆண்டு வழக்காளர் சார்பில் வழக்கை கை வாங்கியதால் மணிவண்ணன் மீண்டும் சபையில் பங்கேற்று வருகின்றார்.

இதனடிப்படையில் சபை நடவடிக்கையில் பங்குகொள்ளாத காலத்தில் இடைநிறுத்தப்பட்ட தனது கொடுப்பனவை வழங்குமாறு கோரி முதல்வர் வி.மணிவண்ணன் சபைக்கு விண்ணப்பித்தார். இந்த விண்ணப்பம் ஆணையாளரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டு, மணிவண்ணன் சபைக்கு வராத காலத்து கொடுப்பனவை வழங்க ஆணையாளர் அனுமதி வழங்கியிருந்தார். அதன்படி, 26 மாதங்கள் காலத்துக்கான மாதக் கொடுப்பனவு மற்றும் சபையால் வழங்கப்படும் தொலைபேசிக் கட்டணம் உட்பட மொத்தம் 6 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கு கொடுப்பனவுச் சிட்டை தயாரிக்கப்பட்டது. குறித்த கொடுப்பனவுச் சிட்டை நிதிப் பிரிவுக்குச் சென்றதன் பின்னர் உள்ளூராட்சி ஆணையாளரின் தகவலின் பெயரில் முதல்வர் மணிவண்ணன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட காலத்துக்கான சகல கொடுப்பனவுகளையும் நிறுத்துமாறு பணிக்கப்பட்டது.

இதனால் 5 மாத கால கொடுப்பனவான ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நீக்கப்பட்டு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு கொடுப்பனவுச் சிட்டை தயாரித்து நிதிப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. எனினும், சபையின் கொடுப்பனவான 6 ஆயிரம் ரூபா தொடர்பில் தொடர்ந்தும் சர்ச்சை இருப்பதனால் அந்தக் கொடுப்பனவுத் தொகையான ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபா கழிக்கப்பட்டு, 4 லட்சத்து 34 ஆயிரம் ரூபா மணிவண்ணனின் வங்கி கணக்குக்கு நேற்று காசோலையாக வைப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-இ)

# காத்திரமான பங்களிப்பை புதிய பல்கலை வழங்கும்

### வவுனியா வளாக முதல்வர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 10

இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும், வடக்கு மாகாண அபிவிருத்தியிலும் நாட்டின் அபிவிருத்தியிலும் வவுனியா பல்கலைக்கழகம் தனது பங்களிப்பை வழங்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார். வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டுள்ள விடயம் தொடர்பாக நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து வவுனியா வளாகமானது பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்று வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதனை பல்கலைக்கழகமாக தரமுயர்த்துவதற்கான செயற்பாடு நீண்டகால கோரிக்கையாக இருந்தது. இந்தக் கோரிக்கையானது வவுனியா வளாக சமூகத்தினராலும், வன்னிப் பிரதேச மக்களாலும் அரசியல்வாதிகளாலும் நீண்டகாலமாக விடுக்கப்பட்டு வந்தது. அந்தவகையில், வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும் விடயம் அரச வர்த்தமானியில் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. தரமுயர்த்தவேண்டியது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியிருந்தமைக்காக ஊடகத்துறையினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும், வடமாகாண அபிவிருத்தியிலும் நாட்டின் அபிவிருத்தியிலும் கல்வி, பொருளாதாரம், கலாசாரம் மென்மேலும் அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு இந்தப் பிரதேசத்துக்குப் பொருத்தமான கல்வியையும் புதிய தொழில்வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளக்கூடிய கல்வியை வழங்கக்கூடிய கற்கைநெறிகளையும் புதிய பீடங்களை ஆரம்பிப்பதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

விரைவில் மருத்துவத்துறை சார்ந்த கல்வியையும் வழங்குவதற்கு நாம் கருத்துக்களை பகிர்ந்துள்ளோம். என்றார். (த-110)



# அமெரிக்காவுக்கு மீண்டும் சுதந்திரதேவி சிலை!

### பரிசளித்தது பிரான்ஸ்

பாரிஸ், ஜூன் 10

அமெரிக்காவின் சுதந்திர தினம் அடுத்த மாதம் 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில், அமெரிக்காவுக்கு பிறிதொரு சுதந்திரதேவி சிலையை பரிசாக அனுப்பியுள்ளது பிரான்ஸ்.

ஹட்சன் ஆற்றின் துறைமுகத்தில் உள்ள லிபர்ட்டி தீவில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரதேவி சிலை 305 அடி உயரமும், 204.1 தொன் எடையும் கொண்டது. அமெரிக்கா சுதந்திரம் அடைந்து நூறாண்டு ஆனபோது பிரான்ஸ் நாடு சுதந்திரதேவி சிலையை வடிவமைத்து அமெரிக்காவுக்கு பரிசாக வழங்கியது. கப்பல் மூலம் அனுப்பப்பட்ட சிலை 1886ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி அமெரிக்க மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த நிலையில் அமெரிக்காவுக்கு பிரான்ஸ் மற்றொரு சுதந்திரதேவி சிலையை செய்து பரிசாக அனுப்பியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 11 . 01 . 1957



விண்ணில் 01 . 05 . 2021

### அமரர் கிறிஸ்தோப்பர் நாஜல்

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
நாட்கள் நாற்பத்தொன்று கடந்து விட்டாலும்
இன்றும் உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை வாழ்வைக்கின்றது.
என்றும் எமது வாழ்க்கைப் பயணத்திற்கு
தெய்வமாக இருந்து வழிகாட்டுவீர்கள்
என்ற நம்பிக்கையில் வாழ்கின்றோம்.

எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு உடனே ஓடிவந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், வேறு வழிகளாலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பூக்கள், பூமாலைகள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும் மறைவுச் செய்தி கேட்ட நாளில் இருந்து இறுதிக் கிரியைகள் நடைபெறும்வரை பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும், மேலும் இறுதி வணக்க ஆராதனை நிகழ்த்திய புனித திரேசம்மாள் ஆலய பாதிரிமார்களுக்கும், ஆலய நிர்வாகத்தினருக்கும், ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும், மறைவுச் செய்தியை பிரசுரித்த பத்திரிகை, இணையத்தளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தந்தை இறையடி சேர்ந்த 41 ஆம் நாளான இன்று (10.06.2021) அவர்தம் ஆத்ம சித்திக்காக ஆண்டவன் திருவடியை வேண்டி நிற்கும்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தொடர்புகளுக்கு:
திருமதி.கிருசாந்தினி இதயகுமார் (மகள்)
+33 7691 77583
S.இதயகுமார் (சசிந்தன்-மருமகன்)
+33 75107 4847 (பாரிஸ், பிரான்ஸ்)
திருமதி. ஜெனனி வசந்தகுமார் (மகள்)
076 848 3349

## மரண அறிவித்தல்



### எழில் வானம்பாடிசாள்ஸ்

**(இளைப்பாறிய ஆசிரியர் - புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்)**

பருத்தித்துறை வராத்துப்பாளையைப் பிறப்பிடமாகவும், பழைய பூங்கா வீதி சுண்டுக்குளி யாழ்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எழில் வானம்பாடி சாள்ஸ் நேற்று (09.06.2021) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி (ஆசிரியர்) மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பெஞ்சமின்-மேரி திரேசா தம்பதிகளின் அன்பு மருமகளும், பெஞ்சமின் சாள்ஸ் (முன்னாள் NHDA, தற்போது கியூடெக்-கரித்தாஸ் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான திருமாவளவன், எழில் வான்மதி மற்றும் காண்டிபன் (கனடா), பார்த்தீபன் (பிரான்ஸ்), Dr. அசோகன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமாஜோதி, ரஞ்சினி, ஞானமகள், இம்மானுவேல், அன்ரனி, அலோசியஸ், மேரி மெக்டலின், டன்சன், சாம்சன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2021) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பரிசுத்த கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**96, பழைய பூங்கா வீதி ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
பெஞ்சமின் சாள்ஸ்
(கணவர்)
T.P 0719159369**

## கட்டுப்பாடுகளை மீறி கொழும்பில் பிறந்தநாள் கொண்டாட்டம்

கொழும்பு, ஜூன் 10 தற்போது நடைமுறையிலுள்ள போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறி கொழும்பு கெஸ்பேவா பகுதியில் உள்ள ஹொட்டலில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 5 பெண்கள் உட்பட 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கெஸ்பேவா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

கொழும்பின் சங்கிரில்லா விடுதியில் நடிகை பியூமி குழுவினர் பிறந்த நாள் கொண்டாடி ஏற்பட்ட சர்ச்சை முடிவடைவதற்குள் மற்றொரு கொண்டாட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5.இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 12 . 1942



இறப்பு 05 . 06 . 2021

### திருமதி பத்மநாதன் சரஸ்வதி

யாழ்ப்பாணம், முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை சேர்ந்த திருமதி பத்மநாதன் சரஸ்வதி அவர்கள் கனடாவில் கடந்த (05.06.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலகணேசமூர்த்தி மற்றும் சுபத்திராதேவி, ஆனந்தமூர்த்தி, கங்காதரன், ரதிகாந்தன், பத்மகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைவாணி, சண்முகராசா, இந்துமதி, கமலாம்பிகை, திலீபா, கணேசாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், முருகேசு, காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் அம்பிகைபாலன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2021) வியாழக்கிழமை கனடாவில் CHAPEL RIDGE FUNERAL HOME & CREMATION CENTRE, 8911WOODBINE AVE, MARKHAM ON L3 R5, GI இல் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

**45/48, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.
T.P: 077 3926 748**

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 02 . 1944



மறைவு 09 . 06 . 2021

### இரத்தினம் கனகலிங்கம்

**(முன்னாள் முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)**

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கனகலிங்கம் அவர்கள் நேற்று (09.06.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற குகானந்தவல்லியின் அன்புக் கணவரும், சரஸ்வதி, குணபாலசிங்கம், அன்னலட்சுமி, தில்லையம்பலம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இராசலிங்கம் (கனடா), அரியநாயகம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், யாழினி, கைலைவாசன் (லண்டன்), கேசவன் (USV-HEMAS Pharmaceutical (Pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன் (City Medical Care,Jaffna), சுகந்தினி (லண்டன்), துஸ்யந்தி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்- மாகாண கல்வித் திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகரஞ்சன், சுவர்ணன், ஆருசன், நிருஷன், அபிசனா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.
T.P: 077 236 7541
077 999 5199**

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

'இந்தியாவில் ஒரு வாரத்தில் ஒரு மில்லியன் பேரில் 85 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றார்கள் என்றால் இலங்கையில் ஒரு வாரத்தில் ஒரு மில்லியன் பேரில் 138 தொற்றாளர்கள் காணப்படுகின்றனர்' என்ற அதிர்ச்சித் தகவலை அரச மருத்து அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் நேற்றுப் பகிரங்கப்படுத்தினார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போது அவர் மேற்படி விடயத்தை வெளிப்படுத்தினார்.

'சுகாதார அமைச்சு கொரோனாத் தொற்றுத் தொடர்பான விவரங்களை வெளியிட்டு வருகின்றது. கொரோனாத் தொற்று தொடர்பான உயிரிழப்பு வீதம் இலங்கையில் மில்லியன் மக்களுக்கு 1.19 பேர் என்ற அளவில் உள்ளது. இந்த எண்ணிக்கை இந்தியாவில் 2.11 பேர் என்ற அளவில் உள்ளது' என்று குறிப்பிட்ட வாசன் ரட்ணசிங்கம், இது இலங்கை இந்தியாவைப் போன்ற ஆபத்தான நிலைமையை அண்மித்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது என தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடு ஊடாக எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை என்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்மையே இதற்குக் காரணம் எனவும் அவர் கவலை வெளியிட்டார். (ஒ.5)

## தொற்றாளர்களை...

உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து அந்தப் பகுதி மக்கள் கண்டன நடவடிக்கையில் ஈடுபட்டதால், வான் நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சத்தங்கள் கேட்டன என்ற அந்தப் பகுதியிலுள்ளவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அண்மையாக நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்றது. குறித்த சம்பவத்தில், விவசாயியான மட்டுவில் சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த வட்டன் வேலாயுதம் (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார்.

தென்னிலங்கையிலிருந்து 5 பஸ்களில் கொவிட்19 நோய்த்தொற்றாளர்கள் அழைத்துவரப்பட்டுள்ளனர். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அண்மையாக துவிச்சக்க ரவண்டியில் பயணித்த விவசாயி ஒருவரை குறித்த பஸ்களில் ஒன்று மோதியதில் அந்த விவசாயி வீதியில் சாய்ந்தார்.

சுயநினைவற்ற நிலையில் காணப்பட்ட அவர் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதும், அதற்கு முன்னரே அவர் உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில், விபத்து இடம்பெற்ற பகுதியில் திரண்ட பொதுமக்கள், ஆக்ரோஷப்பட்டு பஸ்ஸை நோக்கி கற்கள் எறிந்தனர் என்றும், அதனால் பஸ்களில் பாதுகாப்புக்காகப் பயணித்த இராணுவத்தினர் கற்கள் வீசியோர்மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து ராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டனர். கற்கள் எறிந்தனர் என்று குற்றச்சாட்டில் நால்வரை பொலிஸார் அழைத்துச் சென்றனர். சம்பவங்கள் தொடர்பில் விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-9, 26,20,159)

## வடக்கில்...

டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 232 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. நேற்றுப் பகல் 502 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 99 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்றுப் பகல் 233 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 44 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 27 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 25 பேருக்கும், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 28 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், அளவெட்டி மற்றும் பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனைகளில் தலா ஒருவருக்கும் என 121 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா**

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 25 பேருக்கும், பூவரசம்குளம் மற்றும் பாவற்குளம் பிரதேச மருத்துவமனைகளில் தலா ஒருவருக்கும், செட்டிக்குளம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் என 28 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும் என 6 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## 13 நாள்களில்...

500 பேர் உயிரிழப்பதற்கு வெறும் 13 நாள்களே சென்றுள்ளன. உயிரிழப்புக்கள் வீரியமாகி வருவதை பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் பரவ ஆரம்பித்தது. அன்றிலிருந்து இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் தொற்றால் உயிரிழப்பு வீதம் 46.6 ஆகக் காணப்பட்டது. ஆனால் அது மே மாத இறுதியில் 53.4 வீதமாக அதிகரித்துள்ளது. இது மிகவும் ஆபத்தான போக்கு.

மே மாதத்தில் மாத்திரம் 947 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன, என்றார். (ஒ.5)

## திருட்டு...

ஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் மயிலணி பகுதியில் இலங்கை மின்சார சபையில் பணிபுரியும் அலுவலர் ஒருவரின் வீட்டு ஜன்னலை உடைத்து உட்புகுந்து வீட்டில் இருந்த இரண்டரைப் பவுண் நகை மற்றும் ஒரு லட்சம் ரூபா பணம் என்பவை நேற்றுமுன்தினம் திருடப்பட்டிருந்தன. அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணை மேற்கொண்ட, யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் நல்லூர் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரை கைதுசெய்து விசாரணை மேற்கொண்டனர். அதன்போதே, வீட்டில் திருடப்பட்ட இரண்டரை பவுண் நகை மற்றும் ஒரு லட்சம் ரூபா பணம் என்பவை அவரிடமிருந்து மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் சட்ட நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த-26,20)

## பல்கலைக்கழகமாக...

முயர்த்தப்படுகின்றது.

இது பற்றிய அறிவிப்பை, கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

வியாபாரக் கற்கைகள், பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைகள் என்பவற்றின் கற்றல் கிளைகளில் உயர்கல்வியை வழங்கும், மேம்படுத்தும் நோக்குடனும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காகவும், 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து குறித்த வளாகத்தைப் பல்கலைக்கழகமாகத் தாபிக்கின்றேன். அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு 'இலங்கை வவுனியா பல்கலைக்கழகம்' என்ற பெயர் மகுடத்தைக் குறித்தளிக்கின்றேன். வவுனியா நிர்வாக மாவட்டத்தினுள் அத்தகைய பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் என்பதையும் அதன் தற்போதைய இடத்தை பல்கலைக்கழகத்துக்குரிய அமைவிடமாகக் குறித்துரைகின்றேன்.

தெரிவுசெய்யப்பட்ட கற்கைகளில் விசேடத்துவத்தை அபிவிருத்தி செய்யும் இயல்திறனுடன் திடமானவோர் அடிப்படையைக் கொண்ட கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் இலக்குடன் பரந்தளவிலான தொடர்புபட்ட கற்கைகளுடன் சம்பந்தப்பட்ட கற்கைநெறிகளை இந்தப் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி செய்தல்வேண்டும் என்று குறித்துரைக்கின்றேன்.

**பீடங்கள், கற்கைத்துறைகளாக,**

வியாபார கற்கைகள் பீடம், நிதி மற்றும் கணக்கியல் துறை, ஆங்கில மொழி கற்பித்தல் துறை, கருத்திட்ட முகாமைத்துவத்துறை, மனிதவள முகாமைத்துவத் துறை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை, வியாபார பொருளியல் துறை, முகாமைத்துவ மற்றும் தொழில் உரிமையாண்மைத் துறை, பிரயோக விஞ்ஞான பீடம், பௌதிக விஞ்ஞானத் துறை, உயிரியல் விஞ்ஞானத் துறை, தொழில்நுட்பவியல் கற்கைகள் பீடம், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை என்பவை அவற்றில் அடங்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## சிகிச்சைபெற்ற...

அதிகாரிகள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் தொற்றாளர்களின் விவரங்களை வெளியிடுகின்றது. கடந்த ஜூன் 6ஆம் திகதி அவர்கள் வெளியிட்ட பதிவில் 36 ஆயிரத்து 333 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மறுநாள் ஜூன் 7ஆம் திகதி 30 ஆயிரத்து 145 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டி ருந்தது. அந்த ஒரு நாளில் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 172 என்று குறிப்பிடப்பட்டி ருந்தது. அப்படியானால் மீதி 5 ஆயிரத்து 16 பேருக்கும் என்ன நடந்தது?

அவர்கள் வெளியிடும் தரவுகளில் வாரத்துக்கு ஒரு முறை இவ்வாறு திடீர் குறைப்பு நடைபெறுகின்றது. தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு முதலில் மக்களின் நம்பிக்கை வெல்லும்படியாக நம்பகரமான தகவல்களை வெளியிட வேண்டும். அப்போதுதான் நாட்டு மக்களுக்கு தொற்று முகாமைத்துவம் தொடர்பில் சரியான நம்பிக்கை ஏற்படும் என்றார். (ஒ.5)

## ஓய்வூதியர்களுக்கான...

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண பிரதிப் பிராந்திய முகாமையாளர் ஆ. குணபாலச்செல்வம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் சூழ்நிலையால் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறுபவர்களுக்கு வசதியாக பருத்தித்துறை சாலையில் இருந்து 20 பஸ்களும், யாழ். சாலையிலிருந்து 38 பஸ்களும் சேவையில் ஈடுபடவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (த20)

## மண்டபத்தில்...

தனிமைப்படுத்துமாறும், அவர்களுக்கு பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு பிரான்பற்றில் சில தினங்களுக்கு முன்னர் திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது. வீட்டில் திருமணத்துக்கு அதுவும் வீட்டாருடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்தப் பகுதியிலுள்ள திருமண மண்டபத்தில் உறவினர்களுடன் திருமணம் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் சுகாதாரப் பகுதியினருக்கு முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து திருமண நிகழ்வில் பங்கேற்ற 47 குடும்பங்கள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அடையாளம் காணப்பட்டவர்களை தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மன்று கட்டளைபிறப்பித்துள்ளது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
© 2000 Agfa-Gevaert N.V.

# பேர்ள் கப்பல் விபத்து எதிர்பாராத சம்பவமாம்

## அரச தரப்பினர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 10**

**இயற்கை அழிவுகள் எதிர்பாராத சம்பவங்களாகும். அதேபோன்றுதான் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் விபத்தும் இலங்கையில் நடந்துள்ளது. எனவே அரசை எவரும் விமர்சிக்க வேண்டாம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா தெரிவிக்கையில்,

ஒரு கப்பல் துறைமுகத்திலிருந்து பயணிக்க முன் சில தரங்கள் பார்க்கப்படும். அந்த வகையில் எக்ஸ்பிரஸ் கப்பலில் சிறிய தீ பற்றக்கூடிய சிதைவு ஏற்பட்டிருப்பதை, இந்திய துறைமுக அதிகாரிகளிடம் குறித்த கப்பலின் மாலுமி மறைத்து, அனுமதிப் பத்திரத்தைப் பெற்று இலங்கைக்கு அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், இந்தக் கப்பல் சார்ந்த பொறுப்புகூறல் யாருடையது என்பதை இப்போதே தெரிவிக்க முடியாது. கடற்படையினர் இந்த விடயத்தில் தொடர்புபடவில்லை. கடற்பிரதேசத்தில் ஏதாவது ஆபத்து ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தான் கடற்படை தொடர்புபடுகின்றது. விசாரணையில் கப்பலின் மாலுமி மற்றும் அதிகாரிகள் தவிர்ந்த இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க தாமதித்தார்களா என்பது விசாரணையில்தான் தெரியவரும். அதுவரை அரச அதிகாரிகளே பொறுப்புக்கூற வேண்டும் என்று தெரிவிக்கின்ற சில ஊடகங்களும், எதிர்க்கட்சியினரும், ஜனாதிபதி கோத்தாபயவை இந்த விடயத்தில் சிக்கவைக்க முயற்சிக்கின்றனர். அதனால் தான் கடற்படையை அவர்கள் கோர்த்து விடுகின்றனர்.

அதேவேளை, கடல் வளம் மற்றும் மீன் வளம் என்பவற்றுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், சில புகைப் படங்கள் போலியானவை.

உயிரிழந்த மீன்களில் 90 வீதமானவை பிளாஸ்டிக் மூலப்பொருள்கள் விழுங்கியதன் காரணமாகவே தவிர, இரசாயன சேர்க்கையால் அல்ல. இந்த நிலையில் மீன்வளம் மற்றும் கடல்வளத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. அரசு எதனையும் மறைக்காது. சரியான வழியில் இந்தப் பாதிப்பை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கும்- என்றார். (ம-4)

## போலித்தகவல்; ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 10

கொரோனாத் தொற்று தொடர்பாக போலித் தகவல்களை முகநூலில் வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் 2005ஆம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப்பிரிவின் கணினிப்பிரிவு சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களில் போலியான தகவல்களைப் பதிவிடுபவர்கள் தொடர்பில் கண்காணிப்பதற்காக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினிப்பிரிவு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## சேதனப்பசளைக்கு மருத்துவர்கள் ஆதரவு

கொழும்பு, ஜூன் 10

அரசின் சேதனப்பசளை கொள்கைக்கு, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. இலங்கையில் 1960ஆம் ஆண்டு இரசாயன உரங்களைப் பயன்படுத்தி விவசாயத்தை ஆரம்பித்தனர். உணவுப் பற்றாக்குறை மற்றும் கையிருப்பை பராமரிக்கவும், உரப்பயன்பாடு அவசியம். இவை தொற்றா நோய்கள் அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதால் பல பாதகமான விளைவுகள் உள்ளன. அரசின் தற்போதைய தீர்மானத்தை வரவேற்கின்றோம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவர் அருருந்த பாதெனிய தெரிவித்துள்ளார். (ம-4)



## நூறு நகரங்களை அழகுபடுத்தத் திட்டம்

கொழும்பு, ஜூன் 10

நாட்டிலுள்ள நூறு நகரங்களை அழகுபடுத்தும் செயற்றிட்டத்துக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

'சியக் நகர' எனும் இந்தத் திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நகரங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில், பிரதமர் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு, இந்த வாரம் கூடிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**முறையற்ற அபிவிருத்தி காரணமாக பிரச்சினைகள் எழும் நகரங்களாகக் காணப்படும் அநேகமான நகரங்கள் புதிய திட்டத்தின் மூலம், மக்கள் வாழ்வதற்கு பொருத்தமான நகரங்களாக மாற்றப்படவுள்ளன. இதனிடையே, பிரதேச செயலக மட்டத்தில் தொழிற்சாலைகளை அமைத்து முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரிப்பது தொடர்பாக அமைச்சர்களான நாமல் ராஜபக்ச மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் கூட்டாக முன்வைத்த அமைச்சரவை பத்திரத்துக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.** (ம-4)

## மீன்பிடித் தொழிலோடு தொடர்புடைய அனைத்துத் தரப்புக்கும் இழப்பீடு

### உறுதியளித்தது அரசு

கொழும்பு,ஜூன் 10

இலங்கை கடற்பரப்புக்குள் கப்பல் தீப்பற்றி எரிந்த சம்பவத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

" நீதி அமைச்சர், துறைசார் நிபுணர்கள் மற்றும் சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்புகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டே இழப்பீடு வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

இதன்போது நாட்டிலுள்ள மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கருவாடு உற்பத்தி செய்பவர்கள், மீன்களை கிராமங்களுக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்பவர்கள், மீன் கடைக்காரர்கள் மற்றும் மீன் ஏற்றிச்செல்லும் லொறியின் சாரதி உள்ளிட்டோரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் இழப்பீடு வழங்கும் வகையில் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்- என்றார். (ஐ-44)

## மாணவர்களுக்கு மென்பொருள்

கொழும்பு, ஜூன் 10

பாடசாலை மாணவர்கள் வீட்டிலிருந்து இணைய வழியூடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, இலவசமாகப் பயன்படுத்தக்கூடிய மென்பொருள் ஒன்று எதிர்வரும் சில வாரங்களில் அறிமுகப்படுத்தப்படும் என்று டிஜிற்றல் தொழில்நுட்ப மற்றும் நிறுவன மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய மென்பொருளானது, நிகழ்நிலை மென்பொருளைப் போன்றது. இலங்கையின் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஆகியவற்றுடன் இணைந்து இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# ஏப்ரல் 21 தாக்குதலை சாதகமாக்கி கப்பம் கோரிய குழுவினர்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 10

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நாட்டில் நடத்தப்பட்ட தாக்குதலை சாதகமாகப் பயன்படுத்தி, ஒரு சிலரிடம் கப்பம் பெற்றுவந்த குழுவினர் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே, குறிப்பிட்ட சிலருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ள நபர்கள், நீங்களும் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் என்று அச்சுறுத்தியுள்ளனர். அவர்களிடம் சூட்சுமமான முறையில் தகவல்களைப் பெற்று கப்பம் கோரியுள்ளனர். இதனால் அச்சமடைந்த சிலர் லட்சக்கணக்கான பணத்தைக் கப்பமாகக் கொடுத்துள்ளனர்.

கப்பம் கொடுத்த மற்றும் வாங்கியவர்கள் தொடர்பாலான தகவல்கள் கிடைத்துள்ளன.

அதனடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10. 06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.